திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்

[illegible] : 8 7-1-55 வெள்ளி : 14-பக்கம் : விலை 3 அணு மலர் : 22

சென்னையில்

திராவிடர் திருநாள்

எழும்பூர் அழகிரி திடலில்
14-1-55 அன்று நடைபெறும்

★

விளையாட்டு போட்டிகள் ஏராளமுண்டு. நடன நிகழ்ச்சி, இசை விருந்து, நாடகப் போட்டியும் உண்டு.

அறிஞர் அண்ணு பரிசு வழங்குவார்

●

அனைவரும் திரண்டு வருக.

சென்னை மாவட்ட தி. மு. க.

சமாதான மாநாடு.

நம் வழியில் அவர்கள்!

"வயிறு என்ருல் என்ன!"—இப்படிக் கேட்டானும் பெரு வயிறு படைத்த பிரகஸ்பதி ஒருவன்!

"ஓ, அதுவா! எனக்குக் கூட சரியாகத் தெரியாது. 'வயிறு என்ருல் உணர்ச்சிகளுக்கு உயிரூட்டும் உணவுக்கிடங்கு; ஒழுக்கத்தை குழிதோண்டிப் புதைக்கும் மயான பூமி' என வேதாந்தியொருவன் போகிற போக்கில் சொல்லிக் கொண்டு போனதைக் கேள்விப் பட்டிருக்கிறேன்" — இப்படி பதில் சொன்னுனும் மற்றவன்!

தத்துவ விளக்கத்தைத் தேடி அலையும் 'கத்துக்குட்டி' யொருவனுக்கு, 'சத்பொருளின்' ரகசியத்தை கேள்விஞானத்துடன் நிறுத்திக் கொண்டிருக்[illegible]ன் சொன்ன மேற்கண்ட பதி[illegible]போலவே, சென்னையில் கடந்த [illegible]தில் நடந்த சமாதான மாநாடும் [illegible]ந்தது.

நான்கு நாட்களாக நடந்த அந்தப் பெருமாநாட்டு நிகழ்ச்சிகளிலே, 'சமாதானம் என்ருல் என்ன' என்பதற்கு விளக்கங்களும் வியாக்கியானங்களும் செய்யப்பட்டனவே தவிர, சமாதானத்தை நிலைநாட்டுவது எப்படி, அதற்காக மக்கள் அனைவரும் சேர்ந்துப் பணியாற்ற வேண்டிய சாத்தியமான நடவடிக்கைகள் என்னவென்பது பற்றி உருப்படியான யோசனைகளும், செயலாற்றும் வேகத்தையும் வெளிப்படுத்தக் காணேம்!

உலகத்தில் இன்று காணப்படும் கொந்தளிப்பான நிலையைக் கூர்ந்து கவனிக்கும் யாரும், சமாதான கோஷ்டிக்கு எதிராகத் திரும்ப முடியாது என்று மட்டுமல்ல, மனித இதயம் படைத்த யாருமே அந்த இழிவான காரியத்தில் இறங்க முடியாது.

உலகத்துக்குச் சமாதானம் தேவை; மனிதன் தன்னுடைய சக்திகள் அனைத்தையும் தன்னுடைய சந்ததி வளர—வாழ பயன்படுத்துவதற்கான அவகாசம் வேண்டும்! இதில் யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்க முடியாது!

ஆனல், அந்தச் சமாதானப் பாதை எந்தெந்த பொருள்களால் எத்தகைய கருவிகளைக் கொண்டு செப்பனிடப்பட வேண்டும்! இதில்தான் நமக்கு சற்று கருத்துமாறுபாடு இருக்கிறது; சேர்ந்து செயலாற்ற சற்று தயக்கத்தைக்கொடுக்கிறது.

சென்னையில் நடந்த சமாதான மாநாட்டில் பங்கேற்றுப் பெரும் பணியாற்றிய அனைவரும் மிகச்சிறந்த மேதாவிகள்; உலக ஞானத்தைக் கரைத்துக் குடித்த அறிஞர்கள். டாக்டர் கிச்சுலு என்ன, பண்டித் சுந்தர்லால் என்ன, குமரப்பா என்ன, டாக்டர் முல்க்ராஜ ஆனந்த் என்ன, பால்ராஜசகானி அவ்வளவுபேரும் மிகச்சிறந்த நாவலர்கள், புகழ்வாய்ந்த சிந்தனையாளர்கள், திறன்வாய்ந்த எழுத்தாளர்கள், சந்தேகமில்லை!

இத்தனை 'மாமலை'களும் ஒன்று கூடி பேசும் சமாதான இயக்கத்தின் தாத்பர்யங்களை' பற்றி நாம் குறைகூறுவதாக எவரும் கருதிவிடக்கூடாது. சமாதானம் தழைத்தோங்க என்னென்ன முறைகளைக் கையாண்டால் நல்லது என்பவைகளைப் பற்றிய நம்முடைய கருத்து என்ன வென்பதை இந்தச் சந்தர்ப்பத்[illegible]ளிவு படுத்த விரும்புவது—மக்களுக்காகத் தொண்டாற்றும் வீரர்களின் அணிவகுப்பிலே நாமும் ஒரு அங்கமாக இருக்கிறோம் என்ற காரணத்தை முன்னிட்டே ஆகும்.

இருட்டில் தடுமாறும் ஒருவனுக்கு, ஒளி என்ருல் என்ன வென்றுசொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இரு உலகப் போர்களின் பயங்கர நாசத்தையும்—அலங்கோலத்தையும் நேரடியாக கண்டும் அனுபவித்து மிருக்கிற மனிதக் குலத்துக்கு சமாதானம் என்ருல் என்ன வென்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டியது மில்லை. இருளைக் இழிக்கும் ஒளியை எப்படிப் பெறுவது! அணு குண்டுகளையும், நீர்வாயு குண்டுகளையும் போரெனக் குவித்து வைத்துக் கொண்டு உலகத்தை மிரட்டிவரும் அமெரிக்க—ரஷ்ய பூச்சாண்டிகளை எப்படி சுக்கு நூருக்குவது?—இதுதான் இப்போதைய பிரச்னை!

இவைகள் பற்றி 'தத்துவ ரீதியான' விளக்கங்கள் கொடுக்கப் பட்டன—மாநாட்டில் [illegible]ரிய சாத்தியமான நடவடிக்கைகளைப் பற்றி பேச்சேயில்லை. சமாதானத்தைக் கோரி நிற்கும் லட்சக்கணக்கான மக்களிடம் கையெழுத்து வாங்குவதால் சமாதானம் கிட்டுமென நாம் தீர்மானித்துவிட முடியவில்லை.



மதுரை தி. மு. க. அரசியல் மாநாட்டுத் தலைவர்

ஆனல் மாநாட்டில், கையெ[illegible] வாங்கும் பிரச்னைதான் பிரமான[illegible] பெருமைபடக் கூடியதாகவும் பட்டிருக்கிறது.

மக்களின் கையெழுத்துக்கு[illegible] துறைகளில் மதிப்பிருக்கிறது[illegible] நாம் நன்ருக உணர்ந்தவர்க[illegible]லேயே, இப்படிச் சொல்லகிறோம்.

போர்கள் மூள்வது அந்தந்த[illegible] அரசியல்வாதிகளின் எண்ண[illegible] மறைகிற நச்சுக் காற்று; அ[illegible] குலைப்பது அந்தந்த நாட்டு [illegible]கள் பெருஞ் செலவிலே பே[illegible] வரும் படைகளின் குரூர செய[illegible]

இவைகளில்—போர் [illegible] உடன்படிக்கை செய்[illegible] துறைகளில் சாதாரண[illegible] கருத்து—அந்த மக்[illegible]டிலேகூட — ம[illegible] இனியும் மதிக்கப்[illegible] எத்தகைய உத்தர[illegible] பகாம் நூற்ருண்டி[illegible] கிடைக்கவில்லை.

எனவே, சமாதானம்[illegible]தியமாக வேண்டுமா[illegible] அதன் உயர் பீடத்தில் [illegible]களை தன்னல் தட்டிக்[illegible] என்ற நம்பிக்கையிலும், அரசாங்கம் தன்னை [illegible] போதும் சம்மதிக்காது எ[illegible]திலும்மனிதன் இருக்க[illegible] ததந்கெல்லாம், பிர[illegible] சொல்லிக் கொண்டிரு[illegible] கூர்க்க சேக்கியப் படைக[illegible]திலும், நினைத்ததையெ[illegible] குண்டின் மூலமாகவே [illegible]டிருந்த பிரான்ஸ் நிக்[illegible]தின் பாதுகாப்பிலும்தான் செய்தனவென்பது இந்த குறிப்பிடத்தக்கது. தன்[illegible]னுக்காக மற்ற நாட்டுமக்[illegible] தயாராயிருக்கின்றனர் என்[illegible] எந்த ஒரு அரசாங்கத்திற்[illegible]னுலும், அந்த அரசாங்கத்[illegible] வெறிக்கு யாரும் அ[illegible]யாது.

உலகின் கிழக்குப் பிர[illegible] அமெரிக்கா போர் தொ[illegible] அமெரிக்கரை பலியிட வே[illegible]யம் அதற்கில்லை. சீனரும், [illegible] ஜப்பானியரும், பிலிப்பைன்[illegible] கணிசமான அளவுக்கு அமெ[illegible]பில் தங்களுடைய பிணமலை[illegible]பிக் காட்டுவார்கள். இந்த[illegible]தால்தான் செஞ்சீனவுடன் [illegible] மோதிக் கொள்ளலாம் என்[illegible]ரிக்கா எதிர்பார்த்துக் [illegible]மாகும்.

தன்னுடைய சார்பில் மற்[illegible] மக்களை பலிவாங்கும் வசதி காரணத்தால்தான், ரஷ்யா[illegible]வாக போரார்வத்தைக் [illegible]

11-ம் பக்கம் பார்[illegible]

Best copy available.

தீதுபயக்கும் திருவிளையாடற் புராணம்!

புராணங்கள் தமிழகத்திற்குக் கிடைத்தற்கரிய பேறு என்றும். அறிவுக் களஞ்சியம், பக்தியின் இருப்பிடம், கற்பனையின் ...றைவிடம் என்றும் என் நண்பர்களும் மற்றும் பலரும் வாயினிக்கக் கூறக் கேட்டேன். அத்தன்மைத்தான புராணங்களைப் படிக்க அவா மிகவும் கொண்டேன். காதல் மிகுதியால் திறந்த புராணங்களில் எனக்கு முதன் முதலில் கிடைத்தது திருவிளையாடற் புராணம். எல்லையற்ற ஆசை என் மனத்தில் மோதத் திருவிளையாடலைக் காண உள்புறம் சென்றேன். கண்டேன், அறிந்தேன், தெளிந்தேன், முடிவு கொண்டேன். அவைகள் தமிழகத்திற்குக் கிடைத்த பெரும் பேறு அல்ல, நண்பர்கள் சிலர் கூறியபடி—தமிழகத்தை வஞ்சிக்க வந்த, இகழ்ந்துரைக்க வந்த ஓர் சிலரின் கட்டுக் கதைகள் என அறியலானேன். பக்தித் திரை கொண்டு மூடப்பட்டுள்ள ஏமாற்று வித்தைகள் எனப் புரியலானேன். மோட்ச, இன்பலோக இனிப்புக் ...ட்டில் படுபள்ளத்தில் தள்ளவல்ல சூட்... கதைகள் என முடிவுகொள்ளலானேன்.

புறநானூறு படித்துணர்ந்த தமிழ்ப் ...பருமக்கள், தமிழ் இலக்கியங்கள் கற்றுணர்ந்த தமிழ்ப் பெரியார்கள் தமிழரின், ...க்குடியினரின், மறக்குலத்தினரின் போர் ...றமையை, வல்லமையை நன்குயறிவர். தமிழ் மன்னர்களாகிய சேர, சோழ, பாண்...யர்கள் மானங்காக்க வேண்டி, மாநிலம் ...ணவேண்டி, மக்கள் நலம் போற்ற ...ண்டி மாற்றுருடனோ, அன்றேல் தம் ...களாய் எவர்வரினும் அவர்களுடனோ ...நேர் நின்று, போர் செய்வர்; களத் ... வதையே பெரும் மதிப்பாகக் ... . இத்தன்மைத்தான நிகழ்வுகள், ... தமிழ் இலக்கியங்கள், எங்கும் ...டந்து நமது வீரத்தன்மையினை ...ல் விளக்காய் எடுத்துக்காட்டி விளங்...ன. புறமுதுகில் காயங் கண்டால் ...ர் அந்தப் புறமுதுகு காட்டியோன் ...ரூர்கள்—உற்றோர்கள்,

...வ்வித பண்பு வாய்ந்த தமிழகம், ...மாக, மட்டரகமாகச் சொல்லப்படுகிறது நமது கிடைத்தற்கரிய பேறு ...வும் திருவிளையாடற் புராணத்தில். ...நிகழ்ச்சியைத்தான் கேளுங்கள் கேட்...டுங்கள். பின்னர் இது ஒரு தமிழ் ... அதுவும் மரக்குலப் பாண்டியன் ...ம் செயலா என்று.

...புரந்தரசித்து பேரனும், வங்கியபதா...ள்ளையுமான சுந்தரேச பாதசேகரன் ...டும் பாண்டியன் கொலைவாளினாலே, ...டுங்கோன்மை செய்கிற குறுநில மன்...னை அடக்கி உலகத்தில் உயிர்களாகிய ...களை வளர்க்கிறவன். இவன்மீது தன் ...சியைச் செலுத்த வெண்ணியோ அன்... வேறு காரணங் கொண்டோ ஒரு ...ழ மன்னன் வஞ்சி மாலையுடன் வேப்ப...லை யணிந்த சுந்தரேச பாண்டியனை ...க்கிப் படைகளுடன் புறப்படுகிறான்.

இச்சேதி கேட்டுப் பாண்டியன் துள்ளி ...ழுந்து படைத் தலைவனுக்குச் சேதி ...ல், படைகள் கூட்டி, கவசமணிந்து, ...ரை கட்டிய தேரிலே படைகள் பின் ...டர்ந்து வர, முன்னே செல்லுகின்றான். ...ல வேளையிலே கீழ் திசையிலே கதிரவன் ...ம்புவதுபோல்' என்று நினைக்கிறீர்கள். ...லை. கவசமணிய வேண்டிய பாண்டியன் ...ந்த மார்புடன் செல்லுகின்றான், இரதத் ... செல்ல வேண்டிய பாண்டியன் காலில் ...தியடிகூட இன்றி நடந்தும், ஓடியும் ...செல்லுகின்றான்—படைகள் பின் தொடர ...ண்டியவன் பக்தர்கள் புடைசூழச் செல்...கின்றான்; களம் செல்ல வேண்டிய பாண்...ன் கோவிலுக்குச் செல்லுகிறான்—சோம...ரரை வணங்க—அவருடைய உதவி... மன்ன...—பாண்டியன் சோமசுந்தரரை நாடுகிறான் சோழனை ஒழிக்க.

கோழைகளைப் போலல்லவா நடந்து கொண்டிருக்கிறான் என்று நினைப்பீர்கள், ஆம் கோழையைவிடக் கீழ்த்தரமாக நடந்திருக்கிறான். தமிழ் மன்னர்கள் தாம் போர்க்களம் சென்று முடிவை அங்கே காணுவர் அன்றேல் புலவன் ஒருவனை அனுப்பிச் சமரசம் கொண்டு வாழ்வர். ஆனால் இப் பாண்டியன், திருவிளையாடற்புராண பாண்டியன் சோமசுந்தரரை, சூழ்ச்சிக்காரரை அழைக்கிறான் தன் துணைக்கு. சோமசுந்தரரைச் சூழ்ச்சிக்காரர் என்று நான் இங்கு கையாண்டிருப்பதை நண்பர்கள் சிலர் மறுக்கக்கூடும், சினங்கொள்ளவும் கூடும். அவர்கள் தம் நிலை திரும்புவர் நான் ஓர் எடுத்துக்காட்டு 'திருவிளையாடற் புராணத்தில் தந்தால்'என நினைக்கிறேன்.

வேதியர் செய்யும் வேத யாகங்களை வெறுத்தொதுக்கும் சமண முனிவர்களுக்கும் அம்மையின் பாலுண்ட பிராம்மணப் பிள்ளை திருஞான சம்பந்தருக்கும் பாடல் வன்மையில் போட்டியேற்பட அதற்குத் திருமூானசம்பந்தர் மற்றும் சமண முனிகளும் தம் தம் எழுத்து வன்மையை சோதிப்பான்வேண்டி ஒப்புதல்ஒன்று செய்ய அதன்படி எவர் எழுதிய ஏடு பொங்கப் பெருகி வருகின்ற வையையாற்றினை எதிர்த்துச் செல்லுகின்றதோ அவரே வென்றோர் என்பது. அங்ஙனமே அவர்கள் ஏடுகளை வைகையில்போட சூழ்ச்சிக்காரராகிய சோமசுந்தரர் திருஞானசம்பந்தர் ஏட்டில் கயிறு ஒன்றினைக்கட்டி ஆற்றின் போக்கிற்கு எதிர்புறமாக இழுக்க, எல்லோர் ஏடும் தண்ணீர் வழியே ஆற்றின் போக்கில் செல்ல, உமையாள் பாலுண்ட திருஞானசம்பந்தர் ஏடு கயிறு கட்டி இழுக்கப்பட்டதால் [illegible] எதிர்த்துச் சென்றது. இங்ஙனம் சம்பந்தர் வென்றார் சூழ்ச்சியால். சமணர்கள் தோற்றனர். கழுவில் ஏற்றப்பட்டனர் ஆயிரக் கணக்கானவர் ஈவு, இரக்கம்- எள்ளளவும் அற்ற கொடியோர்களால்.

இத்தன்மைத்தான சூழ்ச்சிக்கார சோமசுந்தரர் மீண்டும் சூழ்ச்சியைத்தான் செய்கிறார் பாண்டியன் பக்கமாக நின்று. படைகள் பாண்டியன் பக்கம் அதிகம்போல் தோன்றச் செய்தார். இதன் முடிவாக மீண்டும் தமிழ் இலக்கியத்திற்கு தமிழகத்தின் பெருமைக்கு ஓர் இழுக்கு —சோழன் பயந்து ஓடுகிறான் புறமுதுகு காட்டிப் பாண்டியனுக்கு. சிறிது நேரம் சென்றபின் திரும்பிப் பார்க்கிறான் புறமுதுகு காட்டிய சோழன், பார்க்கிறான் பின்வருபவனை, பாண்டியன் என அறிகின்றான், பண்டார வேடத்தில் தன்னை விரட்டியவனில்லை என்றறிந்தபின் திரும்பத் தாக்குகிறான் பாண்டியனை. மீண்டும் தமிழகம் மாசுபடுத்தப்படுகிறது. பாண்டியன் புறமுதுகு காட்டி ஓடுகிறான். சோழன் பின் தொடருகிறான். புறமுதுகு காட்டி ஓடும் பாண்டியன் தவறி ஓர் அகழியுள் விழ, பின் தொடரும் சோழனும் அந்த அகழினுள் விழ, சூது செய்கின்றார் சோமசுந்தரர். பாண்டியனை கரையேற்றி பிழைப்பிக்கிறார். வெற்றிபெற்றவன் பாண்டியனாகுகிறான். தோற்றவன் சோழனாகுகிறான்.

தமிழகத்து மன்னர்கள் புறங்காட்டி ஓடும் இழித்தொழிலைக் கூசாது செய்கிறார்கள் என்கிறது நமது புராணம். இது தமிழகச் செயல்களைப் புறநானூறுச் சம்பவங்களை எதிரொலிக்கவா செய்கிறது. அந்தோ தமிழகத்தை மாசுபடுத்த வந்த குப்பை தூசு.

இதேவிதமான கோழைத்தனத்தைத் தான் மற்றொரு பாண்டியனான ராஜேந்திரனும் கையாண்டிருப்பதாக திருவிளையாடற் புராணம் கூறுகிறது. சோழனும் இராஜேந்திரன் தம்பியும் இராஜேந்திரன் மீது படையெடுத்து வருகின்றனர். ஆனால் இராஜேந்திரன் போர்க்களம் செல்லாது சோமசுந்தரர் ஆலயம் நோக்கிச் செல்கிறான். ஆலயத்தில் எழுந்தருளி யுள்ளவனைத் துணைக்கழைக்கின்றான் தன் தம்பியுடன் போரிடவும் சோழனை வெற்றிகொள்ளவும். இவைகள் உண்மையிலேயே தமிழ்மன்னர்கள் போர்த்திறனை வீரத்தினைக் கீழ்த்தரமாக மதிக்க உதவும். ஒரு வேற்று மொழியினர் வேறு நாட்டினர் தமிழகம் பற்றி ஆய்ப்புகும் போது நம் கற்பூரப் பெட்டகங்கள் புறநானூறு, கலிங்கத்துப்பரணி போன்ற நூல்களைக் கண்டு ஆயாது இதுபோன்ற புராணங்களைக் கண்டு அதன் மூலம் ஒரு முடிவுக்கு வருவாராயின் தமிழனை எத்துணை கோழை, வீரமற்றவன், பிறர் சூழ்ச்சியால் வெல்ல நினைப்பவர் என எண்ணுவரே யன்றி வேறு கூறார்.

தமிழகம் தன் மக்களை போற்றி வளர்த்தவிதமே தனி, தனக்குள் மக்களைப் பாகு பாடு படுத்தாதது ஜாதிய வெறி கொண்டு. ஆனால் வடக்கிலிருந்து வந்த இப் புராணம் தன் குணத்தை அப்பட்டமாகக் காட்டி, ஜாதிய வெறி, வகுப்புவாத வெறி இவைகளைக் கிளப்புகிறது, வர்ணாஸ்ரம வெறியை வளர்த்திருக்கிறது, பிராமணர்களால் இடப்பட்ட வேலைகளை செய்வதே சூத்திரர்கள் (வேளாளர்கள்) வேலை எனப் பிரிக்கிறது.

ஆனால் நம் திருக்குறளைப் பாருங்கள். நம் தமிழகம் உழவர்களையும் உழவுத்தொழிலையும் எங்ஙனம் போற்றிப் புகழ்ந்து வாழ்த்தியிருக்கிற தென அதில் காணில்தெள்ளத் தெளிவாய் விளங்கும்.

'உழவேதலை' என்கிறார் ஓரிடத்தில்.

'உழவோர் உலகத்தார்க்கு ஆணி' என்கிறது மற்றொரிடத்தில்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்... மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செ...' என்று திருவள்ளுவப் பெருந் தகை...ரின் உண்மை நிலைபற்றிக் கூறுகிறார் அருமையாக, இங்கு உழுதுண்டு வா...ரே பிறரடி பணியா வாழ்க்கை நடத்துபவராகவும் மற்றெல்லோரும் அவரின் பின் சென்று வாழ்க்கை நடத்துபவராகவும்கூறப்பட்டிருக்கிறது உள்ளதை உள்ளபடி. ஆனால் ஆரிய வழி வந்த திருவிளையாடற் புராணமோ இவ்வுழவர்கள் பிராமணர் பின் சென்று அவர் ஏவின வேலை செய்து வாழ்பவர்கள் எனக் கூறுகிறது. ஆதலால்தான் நாம் கூறுகிறோம் தமிழ் நாடு, தனிப் பண்போடு இயங்கும் நாடு, வடநாடு இதனின்றும் பலவகையில் வேறுபட்ட, மாறுபட்ட கொள்கைகளோடு இயங்கும் நாடு என்று.

இன்னோர் எடுத்துக்காட்டு தேவைப்படின் இங்கே கிடைக்கிறது, தமிழக நூல்களுக்கும், வடக்கிலிருந்து இறக்குமதியான நூல்களுக்கும் வேறுபாடுகள் பல உள்ளன என்பதற்கு. நமது மூதாதையரோ சாதிப் பிரிவினை தமிழகத்தில் இல்லை என்றும் ஒன்றே குலமென்றும், ஒருவனேதேவனென்றும் கூறியிருக்கிறார்கள். நம் ஔவைப் பாட்டி கூட கீழ், மேல் குலம் என்று பாகுபாடு படுத்திக்கூறும் போது, இட்டார் (ஏழை எளியவர்களுக்குப் பிச்சை இட்டார்) பெரியோர் என்றும் இடாதார் இழி குலத்தார் என்றுதான் கூறுகிறாரே அன்றி சாதிப்பாகுபாடுகள் செய்ததில்லை. ஆனால் வடக்கிலிருந்து வந்த வஞ்சகப் புராணங்களோ சாதிய முறைகளைப் பிரித்துக் கூறுகிறது.

சாதி வெறியை வளர்க்கும் கொள்...

களும், வகுப்புவாத வெறியை வளர்க்கும் புத்தகங்களும் இங்கு இத் தமிழகத்தில் இருக்கக்கூடாது, இருப்பதற்குத்தகுதியற்றவைகள் என்று நம் நண்பர்களில் பலர் கூறுகிறபடியால், இப்புராணங்களை ஏன் தமிழகத்தினின்று அப்புறப் டடுத்துதல் கூடாது. இப்புத்தகங்களையோ, புளுகுக் கதைகளையோ, கற்டனைச் சித்திரங்களையோ, தமிழகத்தினின்று அப்புறப்படுத்திவிடின் தமிழகத்தின் வீரநடையைக் காட்டும் ஓர் புத்தகம் ஒழிந்தா போய்விடும், தமிழகத்தின் பண்பாட்டினை எடுத்துக் காட்டும் ஓர் நூல் குறைந்தா விடும்.

தமிழகம் இந்தப் புராணத்திஞல் இந்த அளவுதானே தூசுடடுத்தப் பட்டிருக்கிறது—மாசுடடுத்தப் பட்டிருக்கிறது என்று நினைத்துவிட வேண்டாம். தமிழகம் என்ருலே கற்பு, கற்பு என்ருலே தமிழகம் என்று இரு வார்த்தைகளும் இணைபிரியாதிற்கும் என்று கூறப்படுகிறது. எந்தக் கற்பை தமிழகம் என்று நம் முன்னோர்கள் போற்றிப் புகழ்ந்தார்களோ அதே கற்பும் தமிழகத்தின் கண் மாசுடடுத்திக் கூறப்படுகிறது இத்திருவிளையாடற் புராணத்தில்.

'திருமணப் படலம்' என்ற பகுதியிலும் "தமிழுக்குப் பொற்கிழியளித்த படலம்' என்ற பகுதியிலும் தமிழகப் பெண்கள் மிகமிகக் கேவலமாகக் கூறப்பட்டுள்ளனர், சொல்வதற்கும், வரைவதற்கும் வெட்கப் படும்படியான வகையில் ஏதேதோ படுக்கையறைச் சம்பவங்களால் வர்ணிக்கப் பட்டுள்ளனர் தமிழகப் பெண்டிர்களை. இத்தகைய வர்ணனைகள் எதைக் காட்டுகிறது. புராணங்கள் அதுவும் குறிப்பாக திருவிளையாடற் புராணம் தமிழகத்தை மாசுபடுத்த இயற்றப்பட்டுள்ள கதைகள் என்பதைத் தானே!

தமிழகம் தழைக்கவொட்டாது எழுந்த இக்காளான்களை ஒழித்தேயாக வேண்டுமென நாம் கூறுவதுகண்டு கோபம் கொள்ளும் நண்பர்கள் நாம் கூறும் கருத்துக்களைத் தங்களது மனத்திடை இறுத்தி ஆய்ந்து பார்ப்பார்கள் என நாம் நம்புகிருேம். அதுவே பகுத்தறிவுடையவர்கள் செயல், அஃதல்லாது எடுத்ததற்கெல்லாம் நம்மீது கண்டனக் கணைகள் பாய்ச்சுவது அறிவின் பாற் படாத செயலாகும் என்பதுடன், உண்மையிலேயே தமிழக வளர்ச்சிக்கு, தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஊறுசெய்வதாகும் என்பது நமது கருத்து.

—ஞானி

●

சங்கரன் கோவில் தி. மு. கழகம்

10—1—55-ல் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் நடிகமணிகள் எஸ். எஸ். ராஜேந்திரன் டி. வி. நாராயணசாமி தோழர் டி. ஆர். சுப்பிரமண்யம் பேசுவர்.

விற்பனையாகிறது

இரா. இளஞ்சேரன்

எழுதிய

இனிய நெடுங்கதை

காவிதாசன்

●

விலை அணு நான்கு

விற்பனையாளருக்கு கழிவு 25%
அனுப்பும் செலவு இனும்.

விபரங்களுக்கு:

இராசன் பதிப்பகம்

வளையல் செட்டித் தெரு
சாலை, திருவனந்தபுரம்-1.

சுற்றி வந்த

மேயர் குடும்பம்!

சென்னை மேயர் எம். எ. சிதம்பரம் தமிழிசைச் சங்கத்திற்குச் செய்துள்ள சேவையையும் பேயரானதையும் பாராட்ட 3-1-55 காலை அண்ணுமலை மன்றத்தில் தமிழிசைச் சங்கத் தொண்டர்கள் தேநீர் விருந்தொன்று நடத்தினராம்! அந்த விருந்தினைச் சிறப்பிக்க வந்திருந்த டன்மொழிப் புலவர் டி. பி. மீனுட்சி சுந்தரனுர் பேசுகையில், "தோழர் எம், எ. சிதம்பரம் தமது சகோதரர்களைப் போலவே மேயராகிவிட்டதால் இனி அக்குடும்பத்தையே **மேயர் குடும்பம்** என அழைத்தால் பொருத்தமாயிருக்கும்" என்று கூறினுராம்! தமிழிசைத் தொண்டர்கள் மேயருக்கு நடத்தியது தேநீர் விருந்தா அல்லது நையாண்டி விருந்தா என்பது புரியவில்லையென அவ்விருந்தில் கலந்து கொண்ட ஒரு அப்பாவி மனிதர் முணுமுணுத்துக்கொண்டே போனுராம்!

பிராயச் சித்தமாம்!

த. நா. கா. க. தலைவராக தாழ்த்தப்பட்ட தோழர் கக்கன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாரல்லவா? இதனுல் பார்ப்பனச் சேரியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டு விட்டதாம்! தோழர் கக்கன் அவர்களைத் த. நா. கா. கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுத்து விட்டதால், தமிழகத்தின் சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் இம்மியளவும் உயரப்போவதில்லை.

தோழர்கள் கக்கனே, கரையாளரோ, காமராசரோ, அல்லது குல்லுகபட்டரே யாயினுங்கூட வடநாட்டுத் தலைமைப் பீடத்தின் ஜாடை அறிந்து ஏவல் புரிய வேண்டியவர்களே தவிர, இவர்கள் நாட்டுப்பற்றுடனே, சுதந்திரமாகவோ செயலாற்ற முடியாது, ஏதோ தாழ்த்தப்பட்ட சமுகத்திலிருந்து ஒருவரை இப்பதவிக்குத் தேர்ந்தெடுத்தார்களே என்று பெருமைப் படலாம் அதற்காக த. நா. கா. க. உறுப்பினர்களையும் பாராட்ட வேண்டியதுதான். எனினும் தாழ்த்தப்பட்ட சமுகத்திற்கு தனிப்பட்ட உரிமைகள் கிடைத்துவிடுமா யென்ருல் அதுதான் பூஜ்யம்! இதைத் தோழர் கக்கனே அறிவார்.

இந்த லட்சணத்திற்கே — பார்ப்பனச் சேரியின் வயிறு வீங்கிவிட்டதாம். கக்கனு காங்கிரஸ் தலைவர் ஆவதென்று! எனவே இதற்குப் பிராயசித்தமாக ஆவடி காங்கிரசின் வரவேற்புத் தலைவராய் தோழியர் அம்புஜம் அம்மையாரைத் (சீனிவாச அய்யங்காரின் மகள்) தேர்ந்தெடுத்து விட்டார்களாம்!

பட்டிலின் ஜோசியம்!

ஆந்திர நாட்டில் தேர்தல் பிரச்சாரத்தின் பீரங்கியாக, காங்கிரஸ் தலைமைப் பீடத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் தேர்தல் முடிவு எப்படி யிருக்கும் என்பதைப் பற்றி ஆருடம் கூறியிருக்கிருர். அதைப் படித்ததும் சிரிப்பாய் வருகிறது, பட்டீல் என்ருல், காங்கிரசின் 'இரும்பு தலை' என்று புகழப்பட்ட பட்டேலின் பிரதம சீடர் என்ற தனிச்சிறப்பு உண்டு. அந்த பட்டீல் இப்படி தினப்பத்திரிகைகளின் ஜோஸ்யம் போல பேசியிருப்பது கண்டு ஆச்சரியப் பட்டேன்.

காங்கிரஸ், பிரஜா, சிருஷிக்லோக். கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையால் காங்கிரஸ் நிலைமை பலப்பட்டு... தாம்! அதனுல் தேர்தலில் பெருமித... கிடைக்குமாம்! இந்தப் பலசரக்கு பாரத்திஞல், அசல் சரக்கு குறைந்... வது தோழர் பட்டீலின் கண்களி... படவில்லை! தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்குவ... கோணல்புத்தி ஏற்பட்டு சில முக்கிய... கிரஸ்காரர்களும் கூடாரத்தை வி... கிளம்பிவிட்டனர்! இந்த லட்சண... தோழர் பட்டீல் ஆருடம் கூறவ... டார்! முதல் கோணல்—முற்றும் கே... என்பது தெரியாத முத்தண்ணு இவர்!

சர்வம் "காலி" மயம்!

கடவுள், மதம், வேதம் ஆகியவை... காப்பாற்றுகிருேம் என்றபேரால் கூ... போட்டு வந்த வைதீகக் கிறுக்கர்... வாய்க்சவடால் மண்ணைக் கவ்விவ... இதற்கு முன்பெல்லாம் இப்போலி... வாதத்திற்கு முட்டுக் கொடுக்க, சங்... ரிகளும், ஜீயர்களும் மகந்து சா... நாக்கை தொங்க விட்டுக்கொ... வருவர். வாதம் புரிகிருேம் என்... வரட்டுக் கூச்சல் போடுவர். இ... வர்க்கத்தின் குரல் கம்மிவிட்டதா... லாலேதாஸ் கடவுளைக் காப்பாற்ற... தூக்கிகளையும் காஷாயம் அணி... சில பேர்வழிகளையும் துணைக்கழை... டல்லாமல் அவர்களையே ராஜபார்ட்... விட்டிருக்கிருர்கள் சனுதனிகள்!

நம்நாட்டில் நாத்திகம் வள... டதாம்! ஏன் வெளிநாடுகளிலும் அ... விட்டதாம்! உடனே அதைத் தடு... டால் உலக யுத்தமே வந்துவிடுமா... படி உலக யுத்தம் வந்தால் அ... களும் அதற்கு அப்பன் குண்டுகளு... கிவிட்ட இந்தக் காலத்தில் சிவனுடை... மழுவோ, திருமாலின் சங்கு சக்ர... என்ன செய்ய முடியும்? இவர்களும்... சபையில் முறையிடுவதைத்தவிர வே... என்ன யிருக்கிறது?

ஆதலாலே நாத்திகத்தை அ... கிள்ளிஎறிய புறப்பட்டு விட்டனர். புறப்பட்டிருப்பவர்களில் "அவாள்" ருமில்லை. வெளிநாடுகளிலிருந்து ஆ... தைக் கட்டித் காத்து கொண்டுவர ... யாசி! உள் நாட்டிலே கடவுள்களை... பாற்ற பண்டார சாமி! அந்த அ... 'அவாள்' முகாமிலேசர்வம் 'கா... ஆரியம் நம் விரல்களைக் கொ... கண்களைக் குத்த திட்டமிடுகிறது! முடிவு என்ன ஆகும் என்று சரி... சனுதனத்திற்கு புலப்படவில்லை —... பம்! பரிதாபம்!

மாநாடுகள் பட்டபாடு!

சென்ற ஆண்டு இறுதியிலும் ஆண்டு துவக்கத்திலுமாக சென்... எந்தெந்த பேராலோ மாநாடுகள் பெற்று ஓய்ந்துவிட்டன. இவைகளி... பிடத்தக்கவை இசைத்துறை மா... தான்! இந்த டிசம்பர்—ஜனவரி சி... கீத மாநாடுகளைவிட சாதாரண... களில் நடைபெறும் நிகழ்ச்சிகளி... இசையை ரசிக்க முடிகிறது எ... இசை நுகர்வாளர் முகாரி ராகத்தி... வசன நடையும் கலந்து தெரி... இந்த பரிதாபத்திற்குரிய மனிதர் கீத மாநாடுகளில்" எவ்வளவு சகிப்... மையைக் காட்டியிருக்கிருரோ அ...

...களுக்கு ...றிவிப்பு

...ம்பர் மாதம் முடிய பட் ...யும், மலருக்கான முன் பண ...-55-க்குள் எங்களுக்குச் சேரும் ...ல் உடன் அனுப்பி வைக்கவேண்டு ...மீண்டும் நினைவுபடுத்துகிறோம். அப் ... அனுப்பிவைக்காத ஏஜெண்டுகளுக்கு பொங்கல் மலர் அனுப்ப இயலாது என்பதைக் கண்டிப்பாயும், வருத்தத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம். —நிர்வாகி.

திராவிடன்

சென்னை : 7—1—55 : வெள்ளி

மதுரையில் திரளுவோம்.

●

"அதோ, அங்கே தெரியும் மாபெரும் ...ரத்தின் அடியிலேதான் ஜான் மன்னன் ...சார்டா' எனும் மகா சாசனத்திலே ...யெழுத்திட்டான்"

"இதோ, இந்த மண்டபம் அதிபன் அகஸ்டசின் சொந்தப் பணத்தைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கலைஅரங்கம்"

"இதுவென்னவென்று கேட்கிறீர்களா இதுதான் மாமல்ல பல்லவனின் கஜானவை காலியாக்கிய சிற்பக்கூடம்"

இவைகளைப் போல, பழமையின் பெருமைகளை மட்டுமே பறைசாற்றிக் கொண்டிருக்கும் இடங்களை விதிவிலக் காக்கிவிட்டு, பழமையின் பிரதிபலிப்பாக மட்டுமில்லாமல், புதுமையின் எதிரொலியாகவும் நின்று நிலவும் இடங்கள் உலகத்திலே மிகமிகச் ...சொற்பம்!

ரோம், எகிப்து, ஏதென்ஸ், பாரிஸ் ஆகிய நகரங்களின் வரிசையிலே வைத் ...தண்ணப்பட வேண்டிய ஒரு நகரம் தென் ...ட்டிலே இன்றும் இருக்கிற தென்றால், ... மதுரையைத் தவிர வேறில்லை.

ரோம் நகருக்கு மாவீரர்கள் பவனிவரும் பட்டணம் என்ற பெயரும் இருந்தது. அதே நேரத்தில், அடிமைகளை—உயிரும் உள்ள...மும் கொண்ட மனிதர்களை, விலைகூறி விற்கும் ப்ஞ்ச காலத்தில் இழிசெயலும் அங்கு கொடிகட்டிப் பறந்தது.

ஏதன்ஸ், சாக்ரடீசை ஊட்டி வளர்த்த பெருமை படைத்தது; அதேபோல அவனை விஷங்கொடுத்துச் சாகடித்த சிறுமையையும் செய்தது.

எகிப்து, நாகரீகத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தது; சிலுவைப் போர்களின் பிரதான இடமாகவும் இருந்திருக்கிறது.

பாரிஸ், அடேயப்பா! வால்டேரை ...ாழ வைத்த பெருமை யொன்றே ...ாதாதா?—அங்கிருந்து கிளம்பிய நெப்போலியனின் வெறிச் செயலின் விளைவால் ஏற்பட்ட பழியும் அதற்கேற்பட்டு விட்டதே!

தமிழ் மொழியை வளப்படுத்தி இன் ...றளவும் அதை வாழ வைக்கும் ஏற்பாடு ...களைச் செய்து முடித்து பாதுகாப்பேற் ...படுத்திவிட்ட பெருமை தமிழினம் உள்ளளவும் மதுரைநகருக் கிருந்துவரும். அதே போல, காவிய அரசன் ஒருவன் கையால் ...எழுதிக் காலத்துக்கும் அவப் பெயர் ஒலித்...கொண்டிருக்கும் அளவுக்கு 'தாக்கப் ...ாம் மதுரையைத்தவிர வேறில்லை.

ரோம் நகருக்குச் சற்றும் சளைத்ததல்ல நமது மதுரை நகரம்! **இத்தகு சிறப்பு வாய்ந்த நகரத்திலேதான், இந்தத் திங்கள் 8 9-ந் தேதிகளிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2-வது மாவட்ட மாநாடு கூடுகிறது.**

பழமையின் பின்னணியிலே புதுமையின் புரட்சிக்குரல் கிளம்புவது அடிக்கடி நடைபெருத ஒன்ருகும்.

அங்கே இடிந்து கிடக்கும் மணிமண்டபங்கள் நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதைக் காட்டும்; அதைப் பார்த்துவிட்டு மாநாட்டுப் பந்தல் பக்கம் செவியைச் சாய்த்தால், ஏன் வீழ்ந்தோம் என்ற விவரம் கேட்கும்; இந்த இரண்டையும் இணைத்து நமது சிந்தனைப் பட்டறையில் அடித்து நீட்டினல் எப்படி எழுவோம் என்பது தெள்ளெனத் தெரியும்.

கழகத் தோழர்காள், பழமையின் மடியிலே, புதுமையின் மழலை மொழியைக் கேட்டுக் களிக்க மதுரையில் அணிவகுப்போம்.

தென்னுட்டுச் சரித்திரத்தில் தலையாய இடம் வகிக்கும் மதுரை நகரம், நமது இயக்கத்தின் சரித்திரத்திலும் மாபெரும் பேறு பெற்றதாகும்.

திராவிடர் இயக்கத்தைப் பெற்றெடுத்தது சேலம் நகரம்தான் என்ருலும், பிறந்த பிள்ளை 'சுகப்பிரவசம்'தான் என்று நாட்டு மக்கள் நம்மைப்பற்றி முடிவெடுத்தது மதுரையில்தான். வைகையாற்றின் கரையிலேதான் நாம் முதன் முதலாக வீறிட்டு அழுதோம்; 'பால்' கேட்டுக் கதறினேம்.

இன்று 'வளர்ந்த பிள்ளைகளாக' அதே நகரத்தில் மிடுக்காகப் பிரவேசிப்போம். அணி அணியாக—ஆயிரக் கணக்கில்!

வைகையாற்றுப் பந்தலை அலங்கோலமாக்கி நம்மை அலற வைத்த வேலையைச் செய்தவர்களில் ஒருவரே, இப்போது நம்மை நல்வரவுகூறி கைநீட்டிஅழைக்கும் மாநாட்டு நிர்வாகிகளில் ஒருவராக இருக்கிருர் என்பதை நினைக்கும்போது, நாம் செய்த பணியின் வேகத்தை அளந்து பார்க்க இது போன்ற சந்தர்ப்பம் கிடைப்பதரிது என்பதை நம்முடைய நெஞ்சங்கள் தெளிவாக உணர்த்தியே தீரும்.

இவை அனைத்துக்கும் மேலாக, முதல் நாள் மாநாட்டை, தாய்க் குலத்தின் பிரதிநிதி பொருவர்—**தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார்**—திறந்து வைக்கிருர்.

மதுரை என்ருலே பெண்களின் சமத்துவமும் வீரமும் தனியான கவுரவம் பெற்றுவிடுகின்றன! புராண காலத்தில்கூட, அடங்காப்பிடாரி அர்ச்சுனனை—மதுரை ராணி அல்லி ஒருவளே அடக்கி ஒடுக்கினுள் என்று 'பாரதம்' கூறுகிறது. அதைவிடுத்து அரசியல் சரித்திரத்தைப் புரட்டினுலும், ராணி மங்கம்மாளின் பெயர் கம்பீரமாக தலை நிமிர்ந்து நிற்கிறது!

பெண்களின் அடிமைத்தனத்தை மிகத் தீவிரமாக அமூலாக்கிக் கொண்டிருந்த அந்த நாட்களிலும், ராணி மங்கம்மாள் காட்டிய வீரம், தென்னுட்டுப் பெண் இனத்துக்கே ஒரு சிறப்பைச் சேர்ப்பதாகும். திருமலை நாய்க்கரால்கூட அடக்க முடியாத திருவாங்கூர் மன்னனை பெட்டிப் பாம்பாக்கி விட்டாள் மங்கம்மா! தஞ்சாவூரிலே விஷவேகத்தில் வளர்ந்துவந்த மராட்டியருக்கு மங்கம்மாளைப்போல் 'அதிர்ச்சி வைத்தியம்' செய்தவர் யாருமில்லை.

இன்று அவள் இல்லை. அவள் கட்டிய மண்டபம் அங்கிருக்கிறது; அந்த மண்டபங்கள் எடுத்தோதும் ஆயிரமாயிரம் கதைகளையும், "மூலத்தின் சுவை குன்ருமல்" நமக்கு எடுத்துச் சொல்ல, சத்தியவாணி முத்து அம்மையார் ஒப்புதலளித்துள்ளார். முதல் நாள் மாநாட்டைத் திறந்து வைக்கும் தோழர் **தில்லை வில்லாளன்** ஆர்வமிக்கஇளைஞர்; கொடுமையைக் கண்டு கொதிக்கும் இளமையுள்ளம் எப்படி யெல்லாம் திட்டமிட்டு வேலை செய்யும் என்பதற்கு அவருடைய திறப்புரையே சான்றுகூறும்.

இரண்டாம் நாள், அரசியல் மாநாட்டினைத் திறந்துவைக்கும் **தோழர் சுப்ரமணியம் எம். எல் ஏ.** அவர்கள், இன்றைய ஆட்சியாளரின் பயனற்றதும் தீமை பயப்பதுமான செயல்களைக் குறித்து அநுபவ வாயிலான அரியதொரு படமெழுதி காட்டுவார். அந்தப் படத்துக்கு பொருத்தமான விளக்கங்களையும், நிவாரணங்களையும் அரசியல் மாநாட்டுத் தலைவர் **கலைஞர் கருணாநிதி** அவர்கள், தனக்கேஉரிய தேனொழுகும் நடையில் விளக்கி வைப்பார்.

மற்றும் மாநாட்டிலே கலந்து கொள்ளும் கழகத் தோழர்களின் கருந்து விருந்து மதுரை மண்வளத்திற்கேற்ப சுவையுள்ளதாக— அடுத்தது என்ன வென்பதை அறிவிப்பதாக இருக்குமென்று சொல்லத்தேவையில்லை.

அனைத்துக்கும் மேலாக மதுரையில் **அறிஞர் அண்ணா** அவர்களின் போதனை பொன்னேட்டில் பொறிக்கக் கூடியதாக இருக்கு மென்று எதிர்பார்க்கத் தகுந்த நியாயமுண்டு. புரிந்து கொள்ளமுடியாத போக்கிலே போய்க்கொண்டிருக்கும் இன்றைய ஆட்சியின் உண்மையான உருவத்தை நமக்கு அவர் காட்டக்கூடும். அநேகமாக அவருடைய அறிவுரைகளத்தனையும் நம்மையெல்லாம் போராட்டத்திற்கு தயாராக்கும் சங்கநாதமாகவும் இருக்கலாம்.

அரசியல் துறையில் கசப்பான அனுபவங்களை நாள்தோறும் சந்தித்து வரும் இன்றைய நிலையில், மதுரை மாநாடு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

எல்லோரும் திரளுவோம்; மதுரைக்கு நியாயமாகக் கொடுக்கவேண்டிய காணிக்கையைக் கொடுப்போம். வைகை ஆறு வெட்கு மளவுக்கு மனித வெள்ளம் அங்கே குழுமட்டும்.

●

அடுத்தவாரம்

திராவிடன்—பொங்கல் மலராக வெளியிடுவதால், வார இதழ் வெளிவராது. 21—1—55 முதல் வழக்கம் போல 14 பக்கங்களுடன் வெளிவரும்.

21—1—55 இதழில், திராவிடர் திருநாள் நிகழ்ச்சிகள், மதுரை மாநாட்டு விவரங்கள், இரா. இளஞ்சேரன் தீட்டும் பூங்கொத்து, கேள்வி—பதில் மற்ற முக்கிய கட்டுரைகள் வெளிவரும்.

சென்னையில் திராவிடர் திருநாள்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்களின் 'கயிறிழுப்புச் சண்டை'

"இந்த ஆண்டு எழும்பூரில் நடைபெற இருக்கும் திராவிடர் திருநாளில் கழகச் சொற்பொழிவாளர்களின் 'கயிறிழுப்புச் சண்டை'யில், (Tug of war) தோழர்கள் இரா' நெடுஞ்செழியன், கே. எ. மதியழகன், என். வி. நடராசன் மு, கருணாநிதி, கண்ணதாசன், பொன்னம்பலனுர், க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., காஞ்சி மணிமொழியார், காஞ்சி கல்யாணசுந்தரம், வி. எம். ஜான், நாஞ்சில் மனேகரன், ஏ. கே வேலன், முகவை ஆர். எஸ். பாண்டியன், வி. சிவப்பிரகாசம், வி. என். கோவிந்தராசன், எஸ். எஸ். தென்னரசு, கே. ஆர். ராமசாமி, எம்.ஜி. ராமச்சந்திரன், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். ராசேந்திரன் முதலியோர் கலந்து கொள்வதாக ஒப்புதல் அளித்துள்ளனர்.

பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்கள் நடுநிலைமையாளராக இருந்து தீர்ப்பு வழங்குவதுடன், வெற்றிபெறும் குழுவினருக்கு வெள்ளியிலான 'ஷீல்டு' பரிசளிப்பார் என்பதைமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்," என்று சென்னை மாவட்ட செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிருர்.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

3

வர்த்தமான மகாவீரரும், சாக்கிய புத்தரும் தோன்றினர்; பிராமணர்களுக்கும் பிராமணியத்திற்கும் எமனாக மாறினர். அவர்களது சமதர்மக் கொள்கைகள் வருணாஸ்ரம முறையை தகர்த்து பொதுமக்களின் கல்வி ஞானத்தையும் அறிவையும் தூண்டிவிட்டன. சாதி பாகுபாடுகளை நிராகரித்த சமண புத்தர்கள் எல்லா மக்களையும் கல்விக்கூடங்களில் சேர்த்து ஒரு படித்தனை கல்வி அறிவைப்புகட்டினர். சமணபௌத்த பள்ளிகள் ஆயிரக்கணக்கில் நாடெங்கணும் துவக்கப்பட்டு மக்கட் கல்வி வளர்க்கப்பட்டது. அசோக சக்ரவர்த்தியின் காலத்தில் மக்கட் கல்வியானது வளர்ச்சி யடைந்து தலைசிறந்து திகழ்ந்தது. அசோகர் வெட்டி வைத்த கல்வெட்டுகளும், கட்டிவைத்த பௌத்த பள்ளிகளும் பௌத்தர் காலங்களில் மக்கட் கல்வி சிறந்திருந்த உண்மைகளை எடுத்துக்கூறும் சான்றுகளாக உள்ளன. மௌரிய ஆட்சிக்காலம் பொதுமக்கட் கல்வியின் வளர்ச்சி காலமாக இருந்துவந்தது எனக் கூறலாம். பௌத்தர்களும் சமணர்களும் தம் மதக் கல்வியை வளர்ப்பதில் கண்ணாக இருந்தனர் என்றாலுங்கூட அவர்கள் பொதுமக்களானோர் தம் தாய்மொழியில் கல்வி அறிவு உடையோராக இருக்க வேண்டும் என்ற பரந்த கொள்கையையும் கொண்டிருந்தனர். தம் மத மொழியாகிய பாளி மொழியை வளர்க்கும் ஆவலுள்ளவர்களாக இருந்தபோதிலும் உள்நாட்டுமொழிகளையும் அதன் அளவிற்கு வளர்ச்சியடையச் செய்ய ஆவலுடையவர்களாகவும் இருந்தனர். தென்னாடான திராவிட நாட்டைப் பொறுத்தவரையில் பௌத்த சமணர்களின் தொண்டானது திராவிட இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் துணையாக இருந்துவந்துள்ள உண்மையை எவரும் மறுக்க முடியாது. கல்வித் துறையில் பெருமளவிற்கு மக்கள் ஈடுபடவும் அறிவு பெறவும் பௌத்த சமணர்கள் அரும்பெரும் தொண்டாற்றியுள்ளனர். திராவிடநாட்டு கல்வி வரலாற்றை குறிப்பிட்டு, வரும் வாரங்களில் கூறப்படும்போது பௌத்த சமணர்களின் கல்வித் தொண்டு விவரமாகக் கூறப்படும்.

இந்தியாவின் மீது முகமதியர்களின் படையெடுப்பானது பிராமணர்களின் வருணாஸ்ரம கல்வி முறையை நாசமாக்கியது. சமஸ்கிருத வளர்ச்சிக்கு சில இந்திய அரசர்களால் கொடுக்கப்பட்டு வந்த மானியங்கள் நிறுத்தப்பட்டன. சமஸ்கிருத இலக்கிய நூல்கள் கழிக்கப்பட்டன. பிராமணிய கோவில்களும் மடங்களும் வேத ஆசிரமங்களும் தயவு தாட்சண்யமின்றி இடித்து நாசமாக்கப்பட்டன. இந்தியாவில் ராஜ்யங்களை அமைத்துக் கொண்டு ஆண்டுவந்த முகம்மதியர்கள் பிராமணிய இந்துக்களின் வைரிகளாக இருந்து வந்தார்கள், அவர்கள் தம் சொந்த மொழியையும் கல்வி முறையையும் பரவச் செய்து வருவதில் கருத்துக் கொண்டனர். பர்சிய மொழியையும்,அரபு மொழியையும் ஆட்சி மொழிகளாகஏற்படுத்தினர். **மக்தாப்** எனும் சிறு பள்ளிகளையும் **மத்ரசா** எனும் உயர்தர பள்ளிகளையும் நாடெங்கும் ஏற்படுத்தி குரான் வேத புத்தகங்களும் அரபிய நூல்களும் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டன. முகமதியர்கள் குடியேறிய இடங்களில் தங்களுக்கென ஒரு மசூதியைக் கட்டிக் கொண்டனர். அந்த மசூதிகளில் **மக்தாபையும்** இணைத்து சிறுவர் பள்ளிகளை நடத்திவந்தனர். இந்த சிறுவர் பள்ளிகள் **முல்லா** அல்லது **மகூந்த்** எனப்படும் ஆசிரியர்களால் திறம்பட நடத்தப்பட்டு வந்தன. குரான் மற்றும் இஸ்லாமிய நூல்கள் பாடமாக அமைந்தன. பார்சி, அரபு மொழிகள் எழுத படிக்கக் கற்றுக் கொடுக்கப் பட்டது. இம்முகமதிய பள்ளிகளில் இந்து பிராமணிய முறையைப் போலன்றி ஆண்குழந்தைகளுடன் பெண்குழந்தைகளும் கல்வி பயின்று வந்த உண்மை குறிப்பிடத் தக்கதாகும்.

முஸ்லீம் குழந்தைகள் கிரம வயது அடைந்தவுடனேயே **பிஸ்மில்லாஹ், லாயிலாஹா இல்லல்லாஹ்** என்ற குரான் பாடல்களை கற்றுக் கொடுக்கப்பட்டன. அரபிய எழுத்துக்களும் எண்களும் கற்றுக்கொடுக்கப்பட்டதுடன் காலை மாலை இரு வேளைகளிலும் குரான் வேதம் ஓதவும் கற்றுக்கொடுக்கப் பட்டது. மத்ரசா எனும் உயர் பள்ளிகளில் அரபு இலக்கியங்களும் குரான் வேதமும் விரிவாகக் கற்பிக்கப்பட்டு அரபு பர்சிய மொழிகளில் தேர்ச்சிக் கொடுக்கப்பட்டனர். பிராமணர்கள் எப்படி சமஸ்கிருதத்தை போற்றி வளர்த்து வந்தார்களோ அதே போன்று முஸ்லிம்கள் அரபு பர்சிய மொழிகளை வளர்த்து போற்றி வந்தார்கள். ஆனால் முகம்மதியர்களோ தம் குரான் வேதத்தை குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் தாம் படிக்கலாம் கற்கலாம் என்றில்லாமல் யாவரும் படிக்கவும் கற்கவும் ஆன பரந்த எண்ணத்தைக் கொண்டிருந்தனர். அவர்களது குறிக்கோளும் அதுவேதான். மொகலாயர் ஆட்சிக்காலத்தில் அக்பர் ஆதரவில் பிராமணிய வைதிக மொழியான சமஸ்கிருதத்திற்கும் சிறிது செல்வாக்கு இருந்திருக்கிறது, சமஸ்கிருத கல்விக்கு ஆதரவு தரப் பட்டிருக்கிறது. அவர் ஆட்சிக் காலத்தில் இந்திய நாட்டை அடைந்த போர்த்துகிசியப் பாதிரிமார்கள் கூட ஆதரிக்கப்பட்டு நாட்டில் கல்வித்துறை சீர்திருத்தம் செய்யப் பட்டுள்ளது. ஆக்ராவில் ஜெஸ்யூட்ஸ்களால் (Jesuits) நிர்மாணிக்கப் பட்ட ஒரு கல்லூரி அக்பரின் தூண்டுதலின் பேரிலேயே நிறுவப்பட்டதாகும். அக்கல்லூரி ஜெஸ்யூட்ஸ் கல்லூரி (Jesuits College) என்று வழங்கிற்று.

இப்படி யெல்லாம் மதவாதிகளாலும் மத சர்க்காராலும் கல்வித்துறை நடத்தப் பட்டு வந்தாலுங்கூட மக்கள் கல்வி வளரவில்லை; வளம் பெறவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. ஆனால் பௌத்த சமணர்கள் மக்கட் கல்வியின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் செய்துள்ள தொண்டுகள் மிகப் பெரிது. மக்கட் கல்வி அவர்கள் காலத்தில் வளர்ச்சியடைந்திருந்த உண்மையை மறுத்தற்கியலாது.

16-வது நூற்றாண்டின் துவக்கத்திலிருந்தே இந்தியாவை வந்தடைந்த மேலை நாட்டு கிருத்துவப் பாதிரிமார்கள் இந்திய நாட்டு மக்களின் கல்வித் துறையில் பெரும் அக்கரை கொண்டு சாதித்துள்ள சாதனைகள் பௌத்த சமணர்களின் சாதனைகளை விடப் பெரிது எனக் கூறலாம். உண்மையைக் கூறினால் இந்த ஐரோப்பிய பாதிரிமார்கள்தான் இந்திய மக்கட்கு துவக்கக் கல்வி அறிவு புகட்டியவர்களும் மக்கள் மக்களாக வாழ வழி வகுத்துக் கொடுத்தவர்களும் ஆவார்கள். முதன் முதல் திராவிட நாட்டின் மேற்குக் கடற்கரையை அடைந்தவர்கள் போர்ச்சுகேசிய தேசத்தவர்கள்.

இவர்களுடன் வந்த போர்த்துகேசிய கத்தோலிக் பாதிரிமார்கள்தான் இந்திய நாட்டின் சாதாரண கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையிட்டார்களென்று கூறினால் நூற்றுக்கு நூறு உண்மையேயாகும், ஏழை எளிய மக்களுக்கான துவக்கப் பள்ளிகளும் அனாதை ஆதரவற்ற குழந்தைகளுக்கான அனாதை, ஆதரவுப் பள்ளிகளும், உயர்ந்த கல்வி புகட்டும் கல்லூரிகளும் என்ற ஒரு முறையான கல்வியை இந்நாட்டில் வேரூன்றச் செய்தவர்கள் போர்த்துகேசிய பாதிரிமார்கள்தான். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்ற பொருள் பொதித்த பழமொழி தமிழ் மொழிதானென்றாலும் கூட அப்பழமொழியை கேலியும் கிண்டலும் செய்வது போன்றுதான் அக்காலத்தில் திராவிட மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களது கேவல நிலையையும் அறிவிழந்த நிலையையும் கண்ட அந்தப் பாதிரிமார்கள் அவர்களது உயர்வுக்கும்நல்வாழ்வுக்கும் உறுதி பூண்டு கல்வி அறிவைக் கொடுக்க முன்வந்தனர். தெருத் தெருவாக அலைந்து காலையென்றும், மாலையென்றும், பகலென்றும், இரவென்றும். வெயிலென்றும், மழையென்றும் பாராது மௌடிகமே நிறைந்திருந்த ஏழை பாழைகளை தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களைக் கண்டு உணவிற்கும் உடைக்கும் உதவி யளித்து அ... என்ற எழுத்துக்களையும், 1, 2 என்ற ... களையும் கற்றுக் கொடுத்த பெருமை ... போர்த்துகேசிய பாதிரிமார்களையே ...

இந்திய நாட்டில் முதன் முதல் அச்சு ... நிரங்களை நிறுவியவர்களும், சிறுவர்களுக்கான நூதனமான வசன பாடப்புத்தகங்களை வெளியிட்டு கால்கோளிட்டவர்களும் போர்ச்சுகேசிய பாதிரிமார்களே ... வெடிகளையும் குண்டுகளையும் பீரங்கியிலும், துப்பாக்கி முனையிலும் ... திராவிட மக்களை சுட்டு வீழ்த்திய ... கோடகாமா கூட்டத்தினரின் செய்... கழுவாய் தேடினரோ என்னவோ ... போர்த்துகேசிய பாதிரிமார்கள்! போர்த்து... கேசியர்களைப் பின்பற்றிய **டச்சுப் பாதிரி...களின்** செல்வாக்கு நம் நாட்டில் ... குறைவேயாகும், மூன்றாவதாக பிரெஞ்சு **பாதிரிமார்கள்** திராவிடத்திலும், வடஇந்தியாவிலும் ஆரம்பப் பள்ளிகளைத் ... பொதுமக்கள் கல்விக்கு பெரிதும் ...டனர். பாண்டிச்சேரியில் பிரெஞ்சு க... ஒன்று காணப்பட்டு மேலைநாட்டு ஞான போதனைகள் நம்நாட்டு மக்க... போதிக்கப்பட்டன. தமிழ் மொழி... அதன் வளர்ச்சிக்கும் மனமொத்த உதவி வழங்கினர்.

இவர்களைத் தொடர்ந்த டே... **பாதிரிமார்கள்** தரங்கம்பாடியிலும் சே...ரிலும் தங்கி கல்வி முன்னேற்றத்தி... அரும்பெரும் காரியங்களைச் செய்தனர். பாதிரிமார்கள் தமிழ் பாட புத்தக... மட்டுமல்ல பெரும் தமிழ் நூல்களும், அகராதிகளும் இயற்றி தமிழை வள...னர். பைபிள் வேதம் தமிழிலும் தெலுங்கிலும் மொழிபெயர்த்து தமிழ் வசன நடை... அடிகோலினர். இப்படிப்பட்ட பாதிரி...களின் அருமையான தொண்டுகளை... யும் அவர்கள் கல்விவளர்த்த வரலாறு... பற்றியும் மிக விரிவாக வரும் வாரங்... காண்க.

(தொட...

●

பத்மாவதி—விக்ரமாதித்தராச...

தி. மு. கழக பொதுக்குழு உறுப்பி... டுக்கல் விக்ரமாதித்தன் அவர்களின் துணைவி... பத்மாவதி அம்மையாருக்கு 27—12—54 ஆண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ஒன்று வரப்பெற்றோம். நன்றி—நிர்வாகி.

சகுந்தலா—ஏகாம்பரம்

ஆமதாடாத் சம்பல்பூர் 1-வது வட்ட கழக உறுப்பினர் என். ஏகாம்பரம் அவ... துணைவியார் சகுந்தலா அம்மையாருக்கு 15-... தேதி பெண் குழந்தை பிறந்தது. வேணி... பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக ...டன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று வரப்பெ... நன்றி—நிர்வாகி.

பஞ்சாலைத் தொழிலாளர்களையும் வஞ்சிக்காதே !

அரசியலாரே, முத்தரப்புக் குழு சிபார்சுகளுக்குமா பட்டைநாமம்?

பி. அய்யாசாமி, கோவை

எலிக்கு பயந்து வீட்டைக் கொளுத்தினேன் என்று சொன்னால் அவனைப் பற்றி என்ன நினைப்பர் அறிவுடையோர்! கோழைத்தனத்தின் சிகரத்தை எட்டிப் பிடித்த நவீன டென்சிங் என்றுதானே கூறுவர். எலி கடித்தால் விஷம்தான். மறுக்கவில்லை. எலி கடித்தால் விஷமாயிற்றே என்பதற்காக எலியைப் பிடித்து சுட்டுத் தின்பவர்கள் இல்லாமலில்லை. எலியைச் சுட்டுத் தின்றுவிட்டாலும் பரவாயில்லை, எலியைக் கண்டு பயப்படாதே என்றுதான் நாம் கூற விரும்புவது. இன்னும் ஒரு படி கீழே சென்று சொல்லுகிறோம்: எலியைக் கண்டு பயந்தாலும் பரவாயில்லை. வீட்டைக் கொளுத்தாதே என்று. அப்படி எலியைக் கண்டு பயந்து வீட்டைக் கொளுத்திய நவீன "புத்திசாலிகள்" யாரென்றறிய விரும்புவீர்கள். உண்மையாக அப்பேர்ப்பட்ட நிகழ்ச்சியெதுவும் நடந்துவிடவில்லை. ஆனால் அந்தத் தன்மையிலிருந்து அணுவளவுகூட மாறாத முறையில் அண்மையில் ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. சம்பவத்தை நிகழ்த்தியவர்கள் வேறு யாருமல்ல. அடிக்கடி நடுக்கிடும் செய்திகளை வெளியிட்டு நாட்டு மக்களை திக்கு முக்காடச் செய்கிற நம் சென்னை அரசாங்கம்தான்.

தென் இந்திய பஞ்சாலைத் தொழிலாளர்கள் வரலாற்றில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டிய முக்கியத்வம் வாய்ந்த நாட்களில் 21-12-1954-ம் ஒன்று. சாதாரணமாக பஞ்சாலைத் தொழிலாளரின் வாழ்க்கைத்தரம் எப்பேர்க்கொத்தது என்பது நாடறிந்தவிஷயம். பஞ்சாலைத்தொழிலாளி என்றால் அவன் மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவனாக இருந்தால் தான் இன்றிருக்கும் நிலையில் "நல்ல" வாழ்க்கை நடத்த முடியும். ஆலையில் இயந்திரத்தோடு இயந்திரமாக—மனித உணர்வின்றி—உழைத்தால்தான் அவனை தொழிலாளி என்று ஏற்றுக் கொள்ளுகிறார்கள் தொழிலதிபர்கள். அவர்களுடைய ஆசையை நிறைவேற்றுவது எங்கள் கடமை என்ற உணர்வோடு—இயந்திர உணர்வோடு உழைத்துக் கொண்டு தான் வந்தார்கள் தொழிலாளர்கள், பாவம், எத்தனை நாட்களுக்குத் தான் அவர்களும் அப்படி உழைப்பார்கள். காலம் மனிதனின் நிலையைக் காட்டும் நிலைக்கண்ணாடியாயிற்று! அதுவரை அந்தக் கண்ணாடியை எடுத்துப்பாராத தொழிலாளர் சமுதாயம் அன்று தான் பார்த்தது. தங்களின் இழிவான நிலையைக் கண்ணாடியின் மூலம் பார்த்ததும் தாங்க முடியாத வெட்கம் கொண்டது. வெட்கம் வேதனையாக மாறியது. அந்த வேதனையைத் தீர்த்துக்கொள்ள இயந்திர உணர்வு கொண்டிருத்தல் கூடாது. மனித உணர்வு கொள்ள வேண்டும் என்கிற முடிவிற்கு வந்தது. ஆம், மனிதனாக வாழவிரும்பினான் தொழிலாளி.

இயந்திர உணர்வை ஒழித்து மனித உணர்வு பெற்ற தொழிலாளி உழைப்பு முறையிலும் இயந்திரமாக இயங்காது மனிதனாக இருக்க விரும்பினான். வீழ்ச்சியுற்றிருந்த தொழிலாளர் சமுதாயம் எழுச்சியுற்றது. மனித உணர்வு பெற்றுவிட்டால் பிறகு சொல்ல வேண்டுமா தேவைப் படுகிற வசதிகளைப்பற்றி! ஆனால் பேராசை கொள்ளவில்லை. தொழிலாளி. 'இயந்திரம்போல் உழைக்கிறேன். மற்றவர்கள் என்னைப் பார்த்து ஆச்சர்யப் படுகின்ற முறையில் வாழ்க்கை நடத்த விரும்பவில்லை நான்—என்னைப் பார்த்து ஏளனம் செய்யாத வகையிலாவது வாழ்க்கை நடத்த விரும்புகிறேன். அதற்குத் தாங்கள் எனக்கு இப்போது கொடுக்கும் சம்பளம் போதாது. கொஞ்சம் சேர்த்துத் தாருங்கள். அந்த சம்பளமும் மாதாமாதம் ஏறாவிட்டாலும் பரவாயில்லை. குறைந்துவிடாமல் இருக்க ஒரு நிர்ணயம் செய்து விடுங்கள். என்னைவிட குறைவான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற என் சகோதரத் தொழிலாளிக்கு கொடுக்கிற அதே ஊதியத்தைத்தானே எனக்கும் கொடுக்கிறீர்கள். என் பொறுப்பிற்கேற்ற ஊதியம் தரும்படி வேண்டுகிறேன். மற்றொன்று, இரவிலே, பகலில் உழைப்பது போலவே உழைப்பதால் இரவு பகல் என்ற மாறுபாடே இல்லாமற் போய்விடுகிறது. இப்படி உழைப்பது மனித இயல்பிற்கே மாறுபட்டதாகும்.

இருந்தாலும் நாட்டின் நலன் கருதி இரவிலும் பகல்போலவே உழைக்கிறேன். அதற்காக படி (அலவன்சு) மட்டும் சற்று உயர்த்தித்தரவேண்டுகிறேன். இன்னொன்று நானும் மனிதனாக வாழ விரும்புகிறேன். வாரத்திற் கொருநாள்—இயந்திரங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுகிறதே அன்றுதான் நானும் ஓய்வு எடுத்துக்கொள்கிறேன். இயந்திரம் கெட்டுவிட்டால் தாங்கள் அதைக் கவனித்து சரி செய்துவிடுகிறீர்கள், ஆனால் அதனுடன் ஒன்றாகஉழைக்கும் நான் கெட்டுவிட்டால் பழுது பார்க்க தாங்கள் முன்வருவதில்லை. அந்தக் குறையை போக்கிக்கொள்ளும் வகையில் ஏதோ எனக்கு நோய்நொடி வந்தபொழுது; நான் முழுகுணம் அடைகின்றவரையில் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது சம்பளத்துடன் விடுமுறை வசதி செய்துதர வேண்டுகிறேன்" இப்படி ஒவ்வொரு குறையையும் எடுத்துக்கூறி அவைகளை நிவர்த்திக்கும்படி வேண்டிக்கொண்டான் தொழிலாளி முதலாளியிடம்.

நம் தென் இந்தியப் பஞ்சாலை முதலாளிகளிடமா நடக்கும்! வேண்டிக் கொண்டதும் கொடுத்துவிட்டால் தொழிலாளிக்கு பயந்து விட்டார்கள் என்று கூறிவிடுவார்களே என்று தங்களுக்குள்ளாகவே ஒரு தப்பான எண்ணத்தைக் கற்பித்துக் கொண்டு வேண்டுகோள்களை நிராகரித்து விட்டார்கள். உங்களுக்கு மட்டுமா கஷ்டம், பஞ்சாலைகளை நடத்துவதிலே எங்களுக்கு எவ்வளவு கஷ்டம் தெரியுமா? என்று கண்ணீர் வடிக்க ஆரம்பித்தார்கள்.

தொழிலாளி கண்ணீர் விடுகிறான்—கஷ்டம் தாங்காது. முதலாளி கண்ணீர் வடிக்கிறான் நிலைமையை சமாளிக்க. எப்படியிருக்கிறது சம்பவம்! வேண்டுகோள்விட்ட தொழிலாளர் சமுதாயம் உரிமைக்குரல் எழுப்பிற்று. அலட்சியமாக இருந்துவிட்டனர் முதலாளிகள், உரிமையை நேரிடையாக அடைய முடியாத தொழிலாளர்கள் அரசாங்கத்திடம் முறையிட்டனர். தொழிலாளர்களின் முறையீட்டை ஏற்றுக்கொண்டது அரசாங்கம். நாணயமான ஒரு அரசாங்கம் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்தது நமது சென்னை அரசாங்கம். ஒளி இழந்த கண்கள் ஒளி பெற்றால் எத்தகைய மகிழ்ச்சி ஏற்படுமோ அந்த அளவுக்கு நம்பிக்கை பெற்றது தொழிலாளர் சமுதாயம். கோரிக்கையை கவனித்து ஆவன செய்கிறோம் என்று அரசாங்கமே கூறும்பொழுது கொள்ளும் நம்பிக்கைக்கோர் எல்லையுண்டோ?

தொழிலாளர்களின் குறைகளை மட்டும் நிவர்த்திக்க முன்வந்தால் அது ஒரு சார்புடைய செய்கையாகும் என்றெண்ணிய அரசாங்கம் முதலாளிகளுடைய குறைகளையும் அறிய விரும்பிற்று. இது நாணயமான செயல்தான். நியாயத்தை விரும்புகிறவர்கள் இதை மறுப்பதற்கில்லை. தொழிலாளர், முதலாளிகள் ஆகியோருடைய குறைகளை விசாரித்து இருதுறைக்கும் பாரபட்சமின்றி நிவாரணமளிக்க முன்வந்தது அரசாங்கம். அதன் விளைவாகத் தோன்றியதுதான் "ஜவுளித் தொழில் முத்தரப்புக் குழு"

தொழில் துறையில் நல்ல அனுபவம் பெற்ற இரு நபர்கள் அரசாங்கப் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர். தவிர, தொழிலாளர் பிரதிநிதிகளும் தொழிலதிபர் பிரதிநிதிகளும் குழுவின் மற்றைய பிரதிநிதிகளாவர். குழு நியமிக்கப்பட்ட தேதி 9-6-1951 ஆகும். 79 பஞ்சாலைகளுக்கு நேராக விஜயம் செய்து விசாரணை நடத்தி 1953 செப்டம்பரில் தனது அறிக்கையை அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்தது. முத்தரப்புக் குழு விசாரணையை ஆரம்பித்தபோதே தொழிலாளர்களுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. அறிக்கையை அரசாங்கம் பிரசுரித்ததும் அந்த அறிக்கையில் தங்களுக்குப் பாதகமான அம்சங்கள் பல இருந்தபோதிலும் வரவேற்றார்கள் தொழிலாளர்கள். எல்லாம் தனக்குச் சாதகமாகவே இருக்கவேண்டுமென்று எண்ணுவதும் மனிதத்தன்மை யல்லவே! முத்தரப்புக் குழு சிபாரிசுகளில், ஏகோபித்த சிபாரிசுகள் மெஜாரிட்டி சிபாரிசுகள் என்று இருவகைகள் உள்ளன. இந்த இருவகை சிபாரிசுகளிலும் தொழிலதிபர்களுக்கு சாதகமாக பல அம்சங்களும் தொழிலாளர்களுக்கு சாதகமாக பல அம்சங்களும் உள்ளன. ஆக முத்தரப்புக் குழு சிபாரிசுகளை அமுல் நடத்தினால் இருதரப்பினரும் நன்மை அடைவார்கள். இருதரப்பினரும் கொஞ்சம் கஷ்டத்தையும் சமாளிக்க வேண்டியிருக்கும்.

1953 செப்டம்பர் 10-ந் தேதி அறிக்கை வெளியிட்டதிலிருந்து 15 மாதங்களாகியும் சிபாரிசுகளை அமல் நடத்த அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதற்கான அறிகுறியே தென்படவில்லை. அறிக்கையை கண்டது முதல் அதனை அமல் நடத்தக் கோரி பல முறைகள் பல துறைகளில் வேண்டிக் கொண்டனர் தொழிலாளர்கள். அரசாங்கமோ செவிசாய்க்கவில்லை. அரசாங்கத்தின் கவனத்தைக் கவருகின்ற வகையில் ஏதாவது ஒரு முறையை கடைபிடிக்கவேண்டிய கடமை தொழிலாளர்களைச் சார்ந்து விட்டது. யோசித்து நல்ல ஒரு முடிவுக்குத் தான் வந்தனர். ஆம், அந்த ஒரு முடிவைத் தவிர சிறந்த ஒரு முடிவு காண்பது அரிது தான்.

தொழிலாளியின் குமுறுகின்ற உள்ள உணர்ச்சியை வெளிப்படுத்த, கொப்பளிக்கும் சூழ்நிலையை எடுத்துக்காட்ட உறங்குகின்ற அரசியலாரை தட்டி எழுப்ப அறப்போர் துவங்கவில்லை, அறப்போர் வரப் போகிறதென்று அறிகுறி காட்டுவதென முடிவு செய்தனர். ஆம், அடையாள வேலை நிறுத்தம் செய்வதென்ற முடிவுக்குவந்தனர்.

21—12—54-ம் தேதி அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். இந்த நல்ல முடிவை முதலில் செய்தது கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம். அந்த முடிவை ஆதரித்து ஒத்துழைத்தது கோவை மில் தொழிலாளர் சங்கம் நமது திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழகம் இன்னும் ஒரு அமைப்பாக அமைக்கப்படாததால் தான் மேற்கண்ட முடிவை பொதுவாக வரவேற்றது மனப்பூர்வமாக. ஒரு தொழிற் சங்கத்தைச் சார்ந்த தொழிலாளத் தோழர்கள் மட்டும் இம்முடிவை ஆதரிக்கவில்லை. அதுமட்டுமல்ல, வன்மையாகக் கண்டிக்கவும் செய்தனர்! அவர்கள் வாழ்க! முடிவு, அடையாள வேலை நிறுத்தம் வெற்றியைச் சந்தித்தது. இந்த அடையாள வேலை நிறுத்தத்தைக் கண்டாவது அரசாங்கம் முத்தரப்புக்குழு சிபாரிசுகளை அமல் நடத்த முன்வரும் என்கிற எண்ணத்தோடுதான் தொழிலாளிகள் அதை வெற்றிகரமாக நடத்தினர். ஆனால் நடந்தது என்ன!

அடையாள வேலை நிறுத்தம் செய்த அதே 21—12—54ம் தேதி அரசாங்கம் வெளியிட்டிருக்கும் குறிப்பைக் கீழே படியுங்கள்:-

"முத்தரப்புப் பஞ்சாலை விசாரணைக் குழு சட்ட பூர்வமாக அமைக்கப்பட்டதல்ல. ஆகையால் குழுவின் சிபாரிசுகளை அமல் நடத்த முடியாது. சிபார்சுகள் ஒருமனதாக இருந்தால் கூட அவைகளை அமுல் நடத்துவதற்கு சட்டம் எதுவும் இல்லை. இந்த மாகாணத்தில் ஒவ்வொரு ஆலைக்கும் நிலைமை

மாறுபடுகிறது. இக் குழுவின் சிபார்சுகளை அமல் நடத்தும் சக்தி ஒவ்வொரு ஆலையின் நிதி வசதியையும் பொறுத்தது. ஒவ்வொரு ஆலையின் சக்தியையும் அறியாது இச்சிபார்சுகளை அமல் நடத்த நடவடிக்கை எடுப்பது ஆலைகள் மூடப்படுவதிலும் அதையொட்டி வேலையில்லா நிலை ஏற்படுவதிலும்தான் முடியும். ஆகையால் கவனமாக ஆராய்ந்தபின் மட்டார் முத்தரப்புக் குழுக்கள் அமைப்பதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஆனால் தொழிலாளர்களுக்கு உண்மையான குறைகளிருந்தால் தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு வழக்கமாக எடுக்கும் நடவடிக்கையைதொழிலாளர்கள் எடுத்துக் கொள்ளலாம்.''

மேலே கண்டதுதான் முத்தரப்புக்குழுவின் சிபார்சுகளை யொட்டி அரசாங்கம் அளித்த தீர்ப்பு. தீர்ப்பு எப்படி இருக்கிறது என்பதைச் சற்று ஆராய்வோம்.

"குழு சட்டபூர்வமாக நியமிக்கப்பட்டதல்ல ஆகையால் குழுவின் சிபார்சுகளை அமல் நடத்த முடியாது'' என்பதுதானே அரசாங்கத்தின் வாதம்! நாம் கேட்கிறோம் சட்ட பூர்வமாக அடிப்படை இல்லாது ஏன் ஒரு குழுவை நியமிக்க வேண்டும்? உரிமையைக் கோரி கொதித் தெழுந்த தொழிலாளர் சமுதாயத்தை அடக்க அரசாங்கம் செய்த சூழ்ச்சியா இது? குழுவை நியமிப்பதற்கு முன், அது செய்யப்போகின்ற சிபார்சுகளை அமல் நடத்த முடியுமா, அதற்கு சட்டபூர்வமாக ஆதாரமுண்டா? என்பதை ஏன் கவனிக்க வில்லை. அல்லது அன்றைக்குச் சட்டபூர்வமாக இடமிருந்து இன்றைக்கு இல்லாமல் போய்விட்டதா? சட்டபூர்வமில்லாது நியமித்த அந்தக் குழு 22 மாதங்கள் வேலை செய்ததே அதற்காக ஏற்பட்ட செலவுத் தொகை எவ்வளவு ஆயிரம்? அது யாருடைய பணம்? அதற்கு யார் பொறுப்பு சர்க்காரை குற்றம் சாட்டுவதோடு நிற்கவில்லை, அமல்நடத்த சர்க்காருக்கு வழியும் கூறுகிறோம். தைரிய மிருந்தால் நேர்மையிலே நாணயத்திலே நம்பிக்கையிருந்தால் செய்யட்டும். தொழிலாளர் சமுதாயம் சர்க்காரையும் போற்றும்.

''முத்தரப்புக் குழுவின் சிபாரிசுகளை அமல் நடத்த இடம் கொடுக்காமல் இருக்கிறதென சர்க்கார் கூறுகின்ற அந்தச் சட்டத்தை இடம் கொடுக்கிறமாதிரி மாற்றியமைத்துவிடட்டும். இதுசர்க்காரால் முடியாத காரியமா? அதை அமல் நடத்துவதற்கு சட்டம் எதுவும் இல்லை யென்று வேறு கூறப்படுகிறது. அப்படியானால் இன்னும் நல்லதாகப் போய்விட்டது. புதிதாக ஒரு விசேஷச் சட்டம் ஏற்படுத்தி விடலாமே அதற்கு அசெம்பிளியில் எதிர்ப்பு இருக்குமா என்று பார்ப்போம். இதைச் செய்ய சர்க்கார் முன்வருமா?

ஒவ்வொரு ஆலையின் நிதி நிலையைப் பார்க்கும் பொழுது, சில ஆலைகள் லாபத்திலோ அல்லது நஷ்டத்திலோ ஓடாமல் ஒரு எல்லைக் கோட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது ஆகையால் இந்த சிபாரிசுகளை அமல் நடத்த முயற்சித்தால் ஆலைகள் மூடப்படுவதிலும் அதை யொட்டி வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுவதிலும் தான் முடியும் என்று சர்க்கார் கூறுகிறது.

ஏன் இந்த வீண் விளக்கம்? சிபாரிசுகளை அமல் நடத்தத்தான் சட்ட மில்லையே! அப்படியிருக்க, அமல் நடத்தினால்...என்று ஏன் வியாக்யானம் செய்யவேண்டும்? வேலையில்லாத் திண்டாட்டம் என்ற சொற்றொடரைக் கூறி தொழிலாளர்களை பயமுறுத்த இந்தப் பல்லவியா? அதைத்தவிர வேறு என்ன அர்த்தம் இருக்கிறது?

சரி, சர்க்கார் வாதப்படியே வருவோம். லாபமுமில்லாமல் நஷ்டமுமில்லாமல் எல்லைக் கோட்டில் ஓடிக்கொண்டிருக்கிற ஆலைகள் எத்தனை? சுமார் 10 இருக்குமா அல்லது 80 ஆலைகளுமா? மிக மிகக்குறைவான ஆலைகளாகத்தான் இருக்கும். ஏனென்றால் சர்க்காரே தமது அறிக்கையில் கூறியிருக்கிறது ''சில'' ஆலைகள் என்று. அந்தச் சில ஆலைகள் ஏன் அப்படி ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை ஆராய்ந்து, அப்படி வேலை செய்வதற்குத் தொழிலதிபர்கள்தான் காரணம் என்றால் அவர்களைப் பொறுப்பாளிகளாக்கி, அல்லது பொருளாதாரத் துறையிலோ வர்த்தகத்துறையிலோ வசதிக்குறைவென்றால் தக்கவசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், அரசாங்கம்.

அதை விடுத்து, சில ஆலைகளைக் காரணமாகக் காட்டி 90 ஆயிரம் தொழிலாளர்களின் உரிமைக்குரலை, ஏன் குரல் வளைகளையே சட்டம் என்ற சம்மட்டிக் கொண்டு தாக்கினால் நீதியை விரும்புகிறவர்கள் எப்படி பொறுத்துக்கொள்ள முடியும்? இப்பொழுது கூறுங்கள் நமது அராங்கம் "எலிக்கு பயந்து வீட்டை கொளுத்திற்று இல்லையா'' என்று.

இங்கிலையில் தொழிலாளர் சமுதாயத்தின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில், நேரடி நடவடிக்கையில் தனித்தல்லஎல்லோருடைய ஒத்துழைப்பையும் நாடி, ஆம் அடையாள வேலை நிறுத்தத்தில் ஒத்துழையாமையை கடைப் பிடித்தார்களே அந்த தோழர்களின் ஒத்துழைப்பையும் நாடி ஈடுபடப் போவதாக கோவை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தோழர் ப. சு. சின்னதுரை அவர்கள் கூறியிருப்பது வரவேற்கத் தக்கதாகும். அப்படி எல்லோரும் ஒன்றுபட்டு நல்ல ஒரு முடிவெடுத்து நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதை திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டு அமைப்புக் குழு [illegible] மனதுடன் வரவேற்கிறது. இந்தப் பிரச்னையில் அரசியல் கருத்து வேற்றுமைகளை மறந்து ஆளும் கட்சியை ஆதரிக்கின்ற அரசியல் கருத்துக்கொண்ட தொழிலாளத் தோழர்களும் (இதை அரசியல் கண்கொண்டு நோக்காது) தொழிலாளர்களின்உரிமைப்பிரச்னை என்கிற முறையில் அணுகவேண்டும். தொழிலாளர்களின் சக்தி ஒன்றுபட்டு நின்றால் வெற்றி உறுதி! உறுதி!! உறுதி!!!

மதுரை (தி. மு. கழக) சமூக சீர்திருத்த மாநாட்டுத் தலைவர் தோழியர் சத்தியவாணிமுத்து

பம்பாய் தோழர்களின் மகத்தான விருந்து

முயற்சி

சிறப்பு மலர்

அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி, என். வி. என்., தில்லை வில்லாளன், சத்தியவாணி முத்து, பேராசிரியர் க. அன்பழகன், மற்றும் முன்னணி வீரர்களின் கருத்தோவியங்களுடன்

அறிஞர் அண்ணாவின் மூவண்ண முகப்பு

48 பக்கங்கள் : விலை அணா 8

தனிப்பிரதி வேண்டுவோர் 10 அணா தபால் தலைகள் அனுப்பவும். வியாபாரிகட்கு 25% கழிவு

விவரங்கட்கு :— தி. மு. கழகம்
"திராவிடரகம்" 26, லெதர் பஜார்
தாராவி : பம்பாய்-17

சுப்ரமண்ய 'விபீஷணிஸம்'!

— புருடோத்தமன் சென்னை

சினிமாவே பார்க்கக் கூடாது! அது நாட்டிற்குத் தீமை விளைவிப்பது. என்று [illegible] மனதில் எதையோ நினைத்துக் கொண்டு. ஆனால் அவர்களும் போராட்டம் ஆரம்பிக்கும் நிலைமை இன்று ஏற்பட்டிருக்கிறது. தி. மு. க.வின் கலையுலகக் குழுவினரை இடித்துரைத்தவர்கள் இன்று உண்மையிலேயே அவர்களுடைய கருத்துக்கு இசைகின்றனர் என்ற எண்ணம் உள்ளத்து உவகையை உணர்வுபெறச் செய்கிறது.

அப்பொழுதுதான் இந்தப் புதிய நாடகச் சட்டத்தைப் பற்றிய விவரங்கள் வெளிவந்தன. நான் வியப்புக் கடலில் மூழ்கி எழுந்தேன். வேறென்ன செய்வது!

1876-ம் ஆண்டுச் சட்டத்தின் கொடுமையைக் குறைப்பதற்கு இந்தச் சட்டமாம்! மேலும் உரிமை வழங்க புதிய சட்டம் கொண்டு வருகிறாராம், மந்திரி சுப்பிரமணியம்!

பதினைந்து விதிகளைக் கொண்ட அச்சட்டப்படி, தடுக்கப்படும் நாடகங்களை நடிக்கிறவர்கள், அதற்கான இடந்தருகிறவர்கள் ஆகிய அனைவர்களையும் ஆறு திங்கள்வரை சிறை தண்டனை அளிக்கவும், அபராதம் விதிக்கவும், தண்டனை அபராதம் ஆக இரண்டையுமே விதிக்கவும், சென்னை சர்க்கார் உரிமை வழங்கி இருக்கிறது—நாடகத் துறையினருக்கு அல்ல— நீதி மன்றங்களுக்கு!

ஆட்சேபகரமான காட்சிகள் என அச்சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவை:—

பலாத்காரத்தில் ஈடுபடுமாறு தூண்டுவதோ, சட்டப்படி அமைந்துள்ள சர்க்காரைக் கவிழ்க்கும் நோக்குடன், சர்க்கார் நடவடிக்கைகளை செயலற்றதாக ஆக்குவதோ தவறுடையதாகும். —கூறுகிறது சட்டம்!

பலாத்காரம் என்று கூறப்படுவது எது? எந்த முறையை சர்க்கார் 'பலாத்காரம்' என்று எடுத்துக் கொள்கிறது.

சர்க்கார் நடவடிக்கைகளை செயலற்றதாகச் செய்ய ஆக்குவது — என்றால் எது? — பிற்போக்குக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சர்க்காரின் எந்தக் கருத்தையும் விரிந்த மனப்பான்மையுடன் எதிர்ப்பது இதைச் சார்ந்ததாகுமா? நல்ல கருத்துகள் நாட்டில் பரவக்கூடாது என்பது பொருளா? பேச்சுச் சுதந்திரம், பேச்சுத் தந்திரமாக மாற்றப்படுகிறது. சட்டத்தை சட்டமே எதிர்க்கிறது! உத்தமபுத்திரர்கள் ஆட்சியில் அதிசயத்திலும் அதிசயம்!

பல்வேறு பிரிவைச் சேர்ந்த இந்திய குடிமக்களிடை ஒருவருக்கெதிராக ஒருவரை துவேஷமூட்டுவது, பகையை வளர்ப்பது; மதத்தையும் மதக்கருத்துக்களையும் கேலி செய்வதின் மூலம், இந்தியக் குடிமக்களில் குறிப்பிட்ட வகுப்பினரின் மதவுணர்வைப் புண்படுத்துவது; ஆகியவைகளும் புதிய சட்டத்தில் ஆட்சேபகரமானவை எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

ராமாயணம்—(நடிகவேள் ராதாவினுடைய தல்ல) முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட ஒவ்வொருவருடைய மனதையும் புண்படுத்துகிறது. ஒருவரின் கூற்றுக்கிணங்க 'தென்னவரை' 'குரங்குகள்' என்று 'வடவர்' கேலி செய்யும் கதைதான் அது என்று நினைப்பதாக வைத்துக் கொள்வோம். அது தென்னாட்டையே அவமதிப்பதுடன் தமிழினத்தையே கேலி செய்கிறது. அசல் ராமாயணம் போன்ற நாடகத்தை —பல்வேறு பிரிவைச் சேர்ந்த இந்தியக் குடிமக்களிடை—ஒரு வகுப்பினரான தென்னாட்டவரிடை. ஒருவருக்கெதிராக ஒருவரை துவேஷமூட்டுவது, பகையை வளர்ப்பது போன்ற வேலைகளை செய்யும் நாடகத்தை—அசல் ராமாயணத்தை—பார்க்கப் பார்க்க, வடவனின் ஆணவத்தை சுக்குநூறுக்க வேண்டுமென்று, தென்னவருக்கு தோன்ற வைக்கும் கம்ப ராமாயணத்தைத் தடை செய்ய இயலுமா?

'நடைபெறும் காட்சியால் அமைதி கெடக் கூடும் என சர்க்கார் கருதினால், தற்காலிகமாக அக்காட்சியை இரண்டு மாதம்வரை தடுக்கவும், அக்காலத்தை மேலும் நீடித்துக் கொண்டே போகவும், இச்சட்டத்தின் மூலம் சர்க்கார் அதிகாரம் கோரியிருக்கிறது'

எம். ஆர். ராதாவின் நாடகத்தை நடத்த விடாமல் தடுக்க 'சிலர்' செய்த வேலைகள் கண்டு பயந்த அரசாங்கம் இந்த வரிசைகளை சட்டமாக்கியிருக்கிறது. ஆனால் நாம் ஒன்றுகேட்க ஆசைப்படுகிறோம். சிறுபான்மையினர் தடுத்து கலகம் விளைவித்த காரணத்திற்காக ஏற்படுத்தப்பட்ட இச்சட்டத்தை பெரும்பான்மையோர் சிறி எழுந்தால் உபயோகப்படுத்த சர்க்கார் தயார்தானா?

'கிருஷ்ணலீலா' 'ஐயப்பன்' போன்ற நாடகங்கள் நடைபெறும் பொழுது முற்போக்கு கொள்கை கொண்டவர்கள் கொட்டகை வாசலின் முன் நின்று அமைதியான முறையிலேயே எதிர்த்தால் புதிய நாடகச் சட்டப்படி சர்க்கார் அந்நாடகத்தை தடை செய்யுமா? அப்படியானால் மந்திரி சுப்பிரமணியம் போன்றவர்களுடைய எண்ணத்திலே பூவிட்டு மிளிரும் 'பழமைக் கதைகள்' ஒரு மேடையாவது ஏறமுடியுமா?

சர்க்காரின் தடையை மீறுகிறவர்களுக்கு, ஆறுமாதங்களுக்கு மேற்பட்ட சிறை வாசமும், அபராதமும், அல்லது இரண்டும் தரப்படும் என்று சட்டம் கூறுகிறது!

மதுவிலக்குச் சட்டம் வந்தது! உரிமைபெற்ற கடைகள் ஒழிந்தன. வீட்டுக்கொரு கடை தோன்றியது. மதுவிலக்கின் பேரிலே பெரிய நஷ்டம் அரசாங்கத்தைப் பற்றிக் கொண்டது!

மூன்றுவித நஷ்டங்கள்!

1. மதுவிலக்கு காரணமாக மதுவின் பேரில் கிடைத்த மாபெரும் வரி, சர்க்காருக்கு நஷ்டம்!

2. குடிப்பவர்களைக் கண்டுபிடித்து கண்காணிக்க ஏற்படுத்தப்பட்ட போலீஸ் படைக்கு தரப்படும் விசேஷ சம்பளம்!

3. மக்களுக்கு (குடிப்பவர்களுக்கு) அபராதம் லஞ்சம் போன்றவை நஷ்டம்

மேலும் ஒரு பெரிய நஷ்டம் மீதமிருக்கிறது. அதுதான் சர்க்காரின் மதுவிலக்குக் கொள்கைக்கும் நஷ்டம் நினைத்தது நிறைவேறவில்லை!

ஆனால் நாடகச் சட்டம், இதைவிடப் பெரிய நஷ்டத்தை உண்டுபண்ணும். கூறுகிறேன். 'கனம்' கவனிப்பாராக!

முற்போக்குக் கட்சியினர் நடத்தும் நாடகக் கொட்டகைகளுக்குச் சென்று 'பிற்போக்கு' குணம் படைத்தவர்கள் கலகம் விளைவிப்பார்கள்; அதை அடக்க 'தாணுக்காரர்கள்' தேவைப்படுவார்கள் சுற்றுப்புற வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படும். இதே முறைதான் பிற்போக்கு வாதிகள் நடத்தும் நாடகத்துக்கும் ஏற்படும். கடைசியில் 'நாடகச் சச்சரவு என்ற (நாடகத்தை கண்காணிப்பதற்கே) ஓர் இலாகா தேவைப்படும்.

நாடகம் நடத்தி, மற்றவர்களைவிட நாடகத் தொழிலாளர்கள் நன்றாக வாழ்கிறார்கள் என்று கூறுவதற்கில்லை. ஒருசிலர் — முன்னுக்கு வந்தவர்கள் தப்பி விட்டார்கள், அவ்வளவுதான். கலைஞானம் படைத்த ஒருவன் புதிய நாடகம் இயற்றி—பலரிடம் கடன்பட்டு, தொல்லைகள் பல ஏற்று நாடகம் நடத்த வரும்பொழுது—சட்டம் குறுக்கே வந்தால் இந்த நாடக உலகத்தையே அவன் எட்டிப் பார்க்க மாட்டான். புதிய நாடகங்கள் வெளிவர முடியாது.

பழைய நாடகங்களும் மேடைஏறாது. ஆக மொத்தம் வரவு செலவு கணக்கு தேவைப்படாது. தமிழ் நாட்டு நாடகக் கலை ரத்தாகிவிடும். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழில், நாடகம் என்பதை சென்ஸார் பண்ணிவிட்டு; இயல் இசை என்ற இரண்டைக் கொண்டது தான் 'இரட்டைத் தமிழ்'; இது கனம் மந்திரி சுப்பிரமணியம் காலத்திலிருந்து தான் ஆரம்பமாயிற்று, என்று வருங்கால சரித்திர மாணவர்கள் படிப்பார்கள்!

மந்திரி சுப்பிரமணியத்திற்கு சரித்திர ஏடுகளிலே நீங்காத புகழ் நிலைத்து விடும்(!)

இப்பொழுது ஓர் நாடகத்தை அரங்கேற்ற வேண்டுமானால் முதலில் 'நாடகத்தை' போலீஸ் கமிஷனரிடம் காட்டி அதில் சர்க்காருக்கு விரோதமானது ஒன்றும் இல்லை என அவர் புரிந்துகொண்ட பிறகு அவருடைய உத்தரவுக்கு காத்திருக்க வேண்டியிருக்கிறது. இதுவே ஒரு பெருந்தொல்லை விளைவிப்பதாகும்.

இப்பொழுது இந்தச் சட்டம் வேறு வந்தால் ... நாடகத்துறையில் சிறிய ஊதியம் பெற்று வாழ்ந்துக் கொண்டிருப்பவர்கள் வாயிலே மண்ணைப்போடுவதற்குத்தான் இது உதவும்.

ஆச்சாரியார் கல்வி திட்டத்தைக் கொண்டு வந்து தன்னுடைய குலத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றார் ஆனால் அவரின் சீடரோ தனது இனத்துக்கு துரோகம் செய்கிறார்! இதனால் விளையப்போகும் குழப்பங்களை எதிர்பாராதவராக மந்திரி இருக்கிறார் என்பது அவருடைய பேச்சுக்களிலிருந்து நன்றாகத் தெரிய வருகிறது.

நாட்டின் அமைதியைக் காப்பாற்றத்தான்—மக்களின் நல்வாழ்வுக்குத்தான் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். நாட்டில் குழப்பத்தைத் தூண்டுவதற்கு சட்டம் உதவியாக இருத்தலாகாது.

ஆனால் சுப்ரமண்யமோ 'விருப்பமில்லாதவர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றி விடலாம்' என்று கூறுகிறார். தான் மக்களாட்சியில் மந்திரியாக இருக்கிறோம் என்பதை மறந்து பேசியிருக்கிறார்! தமிழ் நாட்டை விட்டு, வேறு எந்த நாட்டிலாவது ஓர் மந்திரி, மக்கள் சபையில் இப்படிப் பேசினால் என்ன நடந்திருக்குமென்பது அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். பாராளுமன்றம் கீழ்ப்பாக்கத்திலிருக்கும் மருத்துவ விடுதி அல்ல என்பதை ஆச்சாரியார் சீடர் அறவே மறந்துவிட்டார்! பரிதாபம்!

நடைப்பாதையிலே பிணம் தோன்றும் நாட்டிலே 'மந்திரி' என்ற பெயர் வைத்துக் கொண்டு நாம் வாழ்கிறோமே என்பதற்கு வெட்கித் தலைகுனிய வேண்டிய மந்திரியார் நிலைமறந்து—இவ்விதம் பேசுகிறார், வியக்கத் தக்கது! வடவர்கள் தங்கள் காரியத்திலே கண்ணாகவிருந்து—'ம. பி. யிலே உருக்குத் தொழிற்சாலை அமைப்பதற்கு காரணம் சென்னை அரசாங்கத்தின் தூங்கும் நிலைமை, என்று டெல்லி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறுகிறார். இதைக் கேட்டு வெட்கப்பட வேண்டிய மந்திரி இவ்வாறு பிதற்றுகிறார்! பரிதாபத்திற்குரிய மனிதர்!

அதைவிட வியக்கத் தக்கது, இவர்களை மந்திரியாக வைத்துப் போற்றும் மக்களின் மனப்போக்கு!

●

மதுரை மாவட்ட தி. மு. க. 2-வது மாநாடு

1955 ஜனவரி **8, 9**-ல் மதுரை ஆரப்பாளையம் ஞான ஒளிவுபுரம் சௌந்தரபாண்டியனார் பந்தலில் நடைபெறும்.

8—1—55 சனி	9—1—55 ஞாயிறு
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: தோழியர் சத்தியவாணிமுத்து	தலைவர்: கலைஞர் மு. கருணாநிதி
திறப்பாளர்: தில்லை வில்லாளன்	திறப்பாளர்: M. P. சுப்ரமணியம் B.A., M.L.A.

இரண்டு நாட்களிலும் **அறிஞர் அண்ணா** அவர்களும், இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்பத், சி. பி. சிற்றரசு, கி. மனோகரன், கண்ணதாசன், அருண்மொழி, பூங்கோதை, இளம்வழுதி, தங்கப்பழம், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., க. அன்பழகன், ஆசைத்தம்பி, கே. வி. கே. சாமி, வி. எம். ஜான், கவிஞர் சுரதா, எம். எஸ். இராமசாமி, பொன்னம்பலனார், இளமுருகனார், அரங்கண்ணல், காஞ்சி கல்யாணசுந்தரம், டி. கே. சீனிவாசன், கே. ஆர். ராமசாமி ஆகியோர் கலந்து கொள்வர். இசைமுரசு நாகூர் அனிபா, இசைச் செல்வி பி. எஸ். செல்வா குழுவினரின் இசை விருந்தும், நடிப்புச் செல்வர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் சந்திரமோகன்—புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் குழுவினர் ஆசை நினைவு நாடகங்களுண்டு.

மாநாட்டுக் கட்டணம் (இருநாட்களுக்கும், நாடகங்களுட்பட)
வரவேற்பாளர் ரூ. 5. பிரதிநிதி 2. பார்வையாளர் 1. பெண்கள் அணா 8.

—வரவேற்புக் குழுவினர்

பேதையின் பெருஞ் செல்வம்

கோ. முத்து பி. ஏ.

ஏட்டைப் பார்த்து ஏடு எழுதி இழுக்கினர் பலர். ஆனால் வள்ளுவரோ நாட்டைப் பார்த்து ஏட்டைத் தீட்டினர். வால்மீகி வரைந்த வடு நிரம்பிய ஏட்டைப் பெரிதும் பின்பற்றினர் கம்பர். இரவல் கருத்துக்கள் அம் கருத்தைக் கவராமற் போயின. புலமை மிக்கவராகக் கம்பர் மிளிர்ந்திருக்கலாம். ஆயினும் புலமை நல்ல கருத்துக்களைப் புணராமற் போயிற்று. வள்ளுவரோ தனித் தமிழ் முதல்நூல் இயற்றினர். நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கையை ஆராய்ந்து அழகிய குறட்பாக்களை அமைத்துத் தந்தார். நம் உணர்விற்கும் அறிவிற்கும் ஒருங்கே சுவையூட்டிய குறளை நினைந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் "தமிழ் இறைவனரின் திருக்குறளிலே ஒரு சொல் இயம்பிக் காட்ட மாட்டாயா?" என்று கேட்கின்றார். ஆயிரத்து முந்நூற்று முப்பது முத்துக்களிலே ஒன்றையேனும் நாம் இன்று எடுத்துப் பார்ப்போம்.

வள்ளுவர் காலத்தில் புறம்பானதொரு புன்மை நாகரீகம் தமிழகத்தில் புகுந்தது. தூய்மையற்ற அந்நாகரீகத்தில் அழுந்தித் தமிழர் தம் உயர்பண்பாடுகளை மறந்து மயங்கிக் கிடந்தனர். இந்த இழிநிலை கண்ட வள்ளுவர் வருந்தினர். பிறர் கொள்கையில் உள்ள மாசையும் தமிழர்தம் கோட்பாடுகளின் மேம்பாட்டையும் விளக்கிக் குறள் நூல் புனைந்தார் என அறிஞர்கள் கருதுகின்றார்கள். இப்படி வெளிநாட்டிலிருந்து நம்நாடு போந்து பல்வகைச் சூழ்ச்சிகளால் தமிழரை மயக்கிய அயலாரை "ஏதிலார்" என்று குறிப்பிடலாமல்லவா?

வருகை தந்த அயலாரை இருகை நீட்டி வரவேற்றனர் சிலர். வரவேற்பு வழங்கியதோடு மட்டும் நிற்கவில்லை. அவ்வயலார்க்கு எல்லா நன்மைகளையும் குறைவற இயற்றினர். அறுசுவை உண்டிக்கு உறுபொருள் உதவினர். மானங்காத்துக் கொள்ள மட்டும் ஆடை தரப்படவில்லை. பொன்னுடை போர்த்தினர்! இருக்க இடம் சிறிதளவு போதுமானாலும் வானளாவிய கட்டடங்களை எழுப்பித்தந்தனர், தங்கள் பெருஞ்செல்வம் அனைத்தையும் வந்தவர் வாழ்வுக்கே வாரி இறைத்தனர். அவர்களோ உடலுழைப்புச் சிறிதுமின்றி உல்லாச வாழ்வு வாழ்ந்தனர். உலகியல் துன்பம் சிறிதும் உணராது கலையில் கருத்தூன்றி இன்ப வெள்ளத்தில் மிதந்தனர், இன்பத்தை ஆரத் துய்த்தனர்! மேனி மின்னிற்று! கருமை நிறம்மாறி ஆடவரும் மகளிரும் மாந்தளிர் நிறம் பெற்றனர். கண்டாரைக் கலங்க வைக்கும் அழகு நிரம்பினர். இது ஒரு காட்சி,

தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் அதே நேரத்தில் வாடிவதங்கிக் கொண்டிருந்தனர். சருகுபோல் காய்ந்தனர். நோயறியாத அவர்களுக்குப் பசியே ஒரு நோயாக வந்தமைந்தது. பசிப்பிணியை மாற்றும் மருத்துவர் மருந்தாகி விட்டனர்! ஆருயிர் மருந்தாகிய அன்னம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. உழைப்பிற்கு அஞ்சாத உத்தமர்களுக்கு உயிர் வாழ வழி இல்லை. கசக்கிக் கட்ட ஒரு துண்டும், குந்த ஒரு குடிலும், உண்ண ஒருபிடி சோறும் கிடைத்தால் போதும் என்று எண்ணினர். ஆனால் அத்தூய தமிழரை ஆதரிக்கும் நற்பண்பு இந்நாட்டுப் பெருஞ்செல்வர்க்கு ஏற்படவில்லை. "பசி" "பசி" என்ற துயர்மிகு ஒலி எங்கும் எழுந்தது.

வந்தாரின் வாழ்வு சோலையாகவும் இங்கு இருந்தாரின் வாழ்வு பாலையாகவும் புரண்டதைப் பார்த்து வள்ளுவர் புண்பட்டார். ஏதிலார் நிலாவிலே குலாவுவதையும், இந்நாட்டார் வறுமையில் எரிந்து சாம்பலாகுவதையும் கண்டு அருள் உள்ளம் வாய்ந்த அவர் கண்கலங்கினர். இந்நாட்டுப் பெருஞ்செல்வரின் செல்வம் அனைத்தும் தம் இனத்தார்க்குப் பயன்படாமல் பிற இனத்தார்க்கு வளம் தருகிறதே என்று வருந்தினர், இத்தகைய கேடுகெட்ட செல்வரை என்னென்று இயம்புவது? "பேதை" என்ற சொல்லைப் பெய்து தாக்கினர் வள்ளுவர். பேதைக்குப் பெருஞ்செல்வம் உண்டானல் தன் இனத்தாரை மறந்து பிற இனத்தாரைப் போற்றுவான் என்று கடிந்துரைத்தார்.

வள்ளுவர் அன்று பார்த்த பேதையர் இன்றும் நம்மிடையே உலவுவது மிகவும் வருந்தத்தக்கது. இன்றும் சில மடங்களிலே 'அவர்களுக்கு' மட்டும் தமிழர் செலவிலே உணவு வழங்குவதை நாம் பார்க்கிறோமல்லவா? குறிப்பிடத்தக்க பரிசுகள் யாவும் அவர்களுக்கே வழங்கப்படுவதற்குக் காரணம் நம்மவரின் அறியாமை தவிர வேறு என்ன இருக்கமுடியும்?

பெண்களைப் பேதையர் என்பதும் தவறு. இளம் பருவத்தினரைப் பேதையர் என்பதும் இழுக்கு. கள்ளுண்டு களித்தோரையும் இன்ன பிறரையும் பேதையர் எனப் பேசுதல் பிழையே. **தம் இனம் வாட பிற இனம் வளரச் செய்யும் நம்நாட்டுச் செல்வர்களே பேதையர் என்னும் சொல்லுக்கு முழு உரிமை உடையவர்கள்!**

மாணிக்கத்தின் மங்கா பேரொளியை இன்னும் நீங்கள் பார்க்கவில்லை யல்லவா? இதோ வள்ளுவரே கூறுகின்றார்.

"ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை."

அகலிகையை வர்ணிக்கும் ஆரியர்!

தமிழ்ப்பித்தன்

ஆச்சரியப் படுகிறீர்களா? கடந்த அநேக ஆண்டுகளாக புராண ஆதாரங்கள் பலவற்றை அமோகமாக எடுத்துக்காட்டித் தன்மான இயக்கத்தினர் கூறிவந்த உண்மை தானே இது; அகலிகை கற்பிழந்ததில் சந்தேகமே யில்லையே என்றுதான் எண்ணுவீர்கள். மேலும் தொடர்ந்து படியுங்கள்!

"முனிவர் நீராட சென்றிருந்த சமயம் பார்த்து அவருடைய உருவத்துடன் குடிசையிலே நுழைந்தான் மகேந்திரன். வந்திருப்பவன் **தேவர்கோன்** என்பதை அறிந்து உள்ளம் **பூரிக்கப்** பெற்று அவன் கூற்றுக்கு **இசைந்து** அகலியை தூய்மை இழந்து போனாள்."

ரங்கோனில் பெரியார் இப்படிப் பேசினாரா? இல்லை, இல்லை! சுயமரியாதை இயக்கத்தினரின் சிந்தனைச் சிதறலா? இல்லை! திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அவ்விதம் பேசினாரா? அதுவும் இல்லை. கழக அனுதாபிகூட அப்படிகூறவில்லை, பின்யார்?

ஒரு ஆஸ்திகர்! **அதுவும் ஆரியர்!** ஸாஹித்திய வல்லப தி. சுந்தராச்சாரியார் என்பவர் தினமணி கதிர் 2—1—55 இதழில் 'இதிகாசச் சோலை' என்ற தலைப்பின் கீழ் ஒரு கட்டுரையில் மேற்படி **உண்மையை** விளக்கியுள்ளார்.

ஆண்டவனைக் காப்பாற்றுவதற்காக அறிவியக்கத்தினரைக் காயும் ஆஸ்திகத் தோழர்களே! மீண்டும் அவ்வரிகளைப் படியுங்கள்.

இதுவரை கடவுள் பக்தர்கள் கூறி வந்ததெல்லாம், கௌதமர் நீராடச் சென்றிருந்த சமயம் முனிவர் உருவில் மாறு வேடத்தில் இந்திரன் வந்தமையால் அப்லை அகலியையால் அடையாளங் கண்டு கொள்ள முடியவில்லை; ஆகையால் கற்பிழந்தாள் என்பதாகும். ஆத்திரமுள்ள சில ஆத்திக நண்பர்கள் தேவேந்திரன் கற்பழிக்க முயற்சிக்கையில் வெளியில் சென்றிருந்த முனிவர் ஞான திருஷ்டியால் (அது முன்பே இல்லை) அறிந்து, உடனே ஓடோடி வந்து இந்திரனை சபித்து விட்டார் என்பர். நிற்க.

மேற்படி கட்டத்தை தோழர் சுந்தராச்சாரியார் எங்ஙனம் வர்ணித்துள்ளார் என்பது ஆராயத்தக்கது.

"வந்திருப்பவன் தேவர்கோன்...மாறு வேடத்தில் வந்திருந்தாலும் அவன் யாரென்பதை அறிந்து கொண்டாள் அகலியை! (பழக்கம்போலும்) கற்பைஅழிக்க வந்தவன் தேவர்களுக்கெல்லாம் அரசனும் அழகு! அழகு!

மேலும் தொடர்கிறார் "......உள்ளம் பூரிக்கப்பெற்று..." பார்த்தீர்களா? தேவர்கோன் என்பதை அறிந்ததும் உள்ளமே பூரித்து விட்டதாம். அகல்யைக்கு! உடல் கூடஅல்ல! அபாரம்! அபாரம்! அகல்யை கற்பிற்கே சாட்சியாயிற்றே!

மேலும் "...கூற்றுக்கு இசைந்து..." என்கிறார். இந்த இடத்தை ஆத்திகர்கள் சற்று அழுத்திப்படிக்க வேண்டும். 'தேவர்கோன்' அகல்யையை கேட்டானும்! என்னவென்று? அதைத் தோழர் சுந்தராச்சாரியாரைத்தான் கேட்க வேண்டும்! இந்திரன் கேட்டான்; அகல்யையும் உள்ளப் பூரிப்போடு இசைந்தாள்! அவ்வளவுதான்! இந்தக்கூற்றுப்படி பார்த்தால் இந்திரன் அகல்யாவை கற்பழிக்கவில்லை; அவள் விருப்பத்தின் பேரிலேயே இன்பம் அனுபவித்திருக்கிறான். அயோக்யதனத்திலும் சிறிது நேர்மையான அயோக்யத்தனம்!

அகல்யாவை திருமணத்தின் போது சாட்சிக்கு அழைக்கிறீர்களே, அவள் நெறி தவறியவளாயிற்றே என்று நாம் ஆயிரமாயிரம் மேடைகளில் ஆதாரத்தோடு முழங்கிய போதெல்லாம், நம்மை நாத்திகர்கள் என்று நாத்தழும்பேறக் கூறினர்களே ஆத்திகர்கள், அவர்கள் பதில் கூறட்டும்—நமக்கல்ல—அகலியை கற்பிழந்ததாகச் சொல்லும் ஆஸ்திகரான சுந்தராச்சாரியார் கூறும் விளக்கத்திற்கு!

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

(Lorry Goods Booking & Forwarding Agencies) 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1

மதறாஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம் நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர் திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு, முழு லோடுகளாக ஏற்றுமதிசெய்கிறோம்.

கிளை ஆபீஸ் : 92, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை. 103—1/127 பழனி ரோடு, திண்டுக்கல்

ஓடிய கதையின் டைரி

கல்லூரியிலே தோழனான ஆணழகன் சேகரை தன் இன்ப வாழ்வுக்கும் தோழனாக்கிக் கொள்ள விரும்பினாள் அழகு மயில் வனஜா. வேல்விழியாளின் வேண்டுகோளை வெறுத் தொதுக்கினான் சேகர். காலப் புயல் சேகரை டாக்டராக்கி வைத்தது. டாக்டரான சேகர் ஆஸ்பத்திரிக்கு நர்ஸாக வந்த நர்மதாவைத் தனது அன்புத் துணைவியாக்கிக் கொள்ளத் துடிதுடித்தான். வனஜாவை வெறுத்த உள்ளம் நர்மதாவை விரும்பியது.

சின்னக் குடை பிடித்து, அன்ன நடைபோடும் நர்மதாவுக்கு துரோகமே உருவெடுத்த ஒரு தம்பியும் இருக்கத்தான் செய்தான். அவனோ மாளிகை மாதரசி அமுதவல்லியை அழைத்துக் கொண்டு எங்கோ ஓடிவிட்டான், அவன் ஓடோடிவிட்டபிறகுதான் அவனால் கற்பழிக்கப்பட்ட வேலைக்கார வேணியின் சோகக் கதையை புரிந்துகொள்ளுகிறாள்...தன்னோடு வாழவும் அனுமதி தருகிறாள் நர்மதா.

வேதனையான வாழ்வு நர்மதாவை வட்டமிட்டபோதுதான் வேடிக்கைமொழி பேசி காதல் கூண்டிலே அந்த அழகுக் கிளியை அடைத்துவிட துடித்தான் கபடன் கண்ணன். கண்ணன் குயில் மொழிக் குமரிகளைக் குப்பைமேட்டுக் கோட்டானாகத்தான் மதித்தான். அவனால் சீரழிந்த சிங்காரிகள் ஆயிரமாயிரம். அவர்களிலே ஒருவள் தான் சுந்தரி! சுந்தரியின் காதல் குமரனை...அவள் கற்பு கபடனால் மிதிக்கப்பட்ட பிறகு...அவளை ஏமாற்ற விரும்பவில்லை. எனவே, கடலுக்குள்ளே, மூழ்கித் தனது கவலையை மறக்க முயன்றாள்; 'சூழ்நிலை' அவளைச் சாகடிக்கவில்லை. நர்மதாவின் அன்புப் பாதுகாப்புக்கு வந்து சேர்ந்தாள். சுந்தரியைக் கெடுத்த கண்ணன்தான் நர்மதாவுக்கும் வலை வீசினான். அந்த நயவஞ்சக நரிக்கு அன்பழைப்புத் தந்து அறிவுப் பாடந் தந்தனுப்பினாள் நர்மதா. இழிவைத் தாங்காத கண்ணன் போக்கிரி பக்கிரியின் துணையோடு கடற்கரையிலே சந்தித்து நர்ஸையும், டாக்டரையும் அவமானப்படுத்துகிறான். அதே நேரத்தில் அவனைத் தேடிக் கொண்டிருந்த போலீஸின் கையிலே பக்கிரியும்—கண்ணனும் சிக்குகிறார்கள், டாக்டர் லீவு எடுத்துக்கொண்டு அமைதிக்காக குற்றாலம் செல்லுகிறார். ரயில் பயணத்தின்போது நண்பனின் மனைவியைத் தூங்கிக் கொண்டிருக்கும்போது முத்தமிட்டு அவள் விழித்தெழுந்து கன்னத்திலே அறையும் காட்சியைக் காணுகிறார். அறைவாங்கிய நட்புத் துரோகி அடுத்த பெட்டியிலே போய் ஏறிக் கொள்கிறான்...வண்டி ஓடிக் கொண்டேயிருந்தது. கதையும் ஓடுகிறது. இனி படியுங்கள்,

21

வேடதாரி கண்ணனும் அவனது கூட்டுத் தோழர்களும் போலீஸ் காவலோடு, விலங்கு பூட்டிய கரத்தோடு நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டனர். கண்ணன் கறுப்புக் கண்ணாடி அணிந்து கம்பீரமாக நின்றுகொண்டிருந்தான். ராஜபார்ட்போல நீண்டு வளர்ந்திருந்த கேசத்தைப் படிய வைக்காமலேயே பார்ப்பதற்கு கோர உருவெடுத்து காட்சி தந்தான் பக்கிரி. வழக்கு மன்றத்திலே தாங்கள் இப்படி ஒரு கைதியாக நின்று கொண்டிருப்போமென்று கனவுகூடக் காணவில்லை. எதிர்பாராத அதிர்ச்சி. அந்த அதிர்ச்சியின் திகில் உள்ளத்துக்குப் புயலாகியது. புகைந்த இதயத்தினராக இருந்தாலும் தெளிந்த நெஞ்சினரைப் போல் நடிக்கத் துவங்கினர்.

குற்றக் கூண்டை நோக்கி நடந்துவந்துகொண்டிருந்த பெண்ணழகி பக்கத்திலேயிருந்த வக்கீலைப் பார்த்தாள். வக்கீலோ முறுவல் பூத்த முகத்தோடு சாந்தமே உருவெடுத்து அமர்ந்திருந்த நீதிபதியைப் பார்த்தார். அவரோ பெண்ணழகியின் மீது பார்வையை பதித்து பேசும்படி கட்டளை தந்தார். அவளும் வீணைக் குரலெடுத்துப் பேசத் துவங்கினாள்.

...என் பெயர் ரமணி. பால் விற்பது [illegible]து தொழில். மைலாப்பூர் அப்பு[illegible]ம் முதலித் தெருவிலே வசிக்கிறேன். [illegible] டீ[illegible]க்குப் போய்விட்டு [illegible]ல் வழியாக வந்துகொண்டிருந்தேன். அன்னைக்கு யாரும் என்னோடு வரவில்லை. எனவே, வழக்கத்துக்கு சற்று அதிகமாகவே நடந்து சென்றேன்...'ஸிஸ்டர்' என்ற அழைப்பைக் கேட்டுத்திரும்பிப் பார்த்தேன். அதோ அங்குல அளவுள்ள கட்டம்போட்ட சட்டை போட்டிருக்கிறானே அந்தக் கொடியவன்தான் என்னை உரிமை பாராட்டி அழைத்தானென்பது திரும்பிப் பார்த்ததுந்தான் புரிந்தது. தயக்கத்தோடு நின்றேன். நான் வாடிக்கையாகப் பால் கொடுக்கும் ஏகாம்பரத்தின் வீட்டுக்குப் பக்கத்திலேயிருந்த சிறு அறையிலே இந்த ராசகாரனை அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஏகாம்பரத்தின் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அர்த்தமில்லாமல் சிரித்துக் கொண்டே நின்றுகொண்டிருப்பான். இந்த விசித்திரக் கள்ளனை அந்த அர்த்த ராத்திரியிலே சந்தித்தபோது என் உள்ளத்துக்கே பயமாகத்தானிருந்தது. அதைவிட பயங்கரமாக இருந்தது அவன் பேசிய பேச்சு. 'காதல்' நல்லாயிருக்காது கேட்டான் குறும்பாக. நான் பார்த்துவிட்டு வந்தேனோ பானுமதி நடித்த காதல். அதைக் கேட்க இந்த வம்பன் ஏன் வந்தானென்று அடி அடித்துப் போனேன். அவனோ பேசிக் கொண்டேயிருந்தான் 'ஸிஸ்டர்'னு கூப்பிட்டு காதலைப்பத்திப் பேசறேன்னு நினைக்கிறியா? என்று ஆதரவாகக் கேட்டுக்கொண்டே வழிமறித்து நின்றான். வழிவிடும்படி வேண்டினேன். அவனோ நெருங்கிக் கொண்டிருந்தான். பலங்கொண்டமட்டும் கதறியழுதேன். அழுகுரல் கேட்டு அபயமளிக்க ஓடோடி [illegible]வர்கள் போல கண்ணனும்... [illegible] மற்ற நால்வரும் ஓடிவந்தார்கள். [illegible] அவர்களிடம் என் வேதனை[illegible]யை விளக்கினேன். என்னை வழி[illegible]த்த அந்த முதல் முரடன் சற்று [illegible]த்திலிருந்த தெரு விளக்கின் அருகிலே போய் நின்று கொண்டிருந்தான். அபயமளிக்க வந்த இந்த கறுப்புக் கண்ணாடி மாட்டியிருப்பவர் என் காதிலே ரகசியம் பேசினார். வழி மறித்தவனோ முரடன். அந்த வட்டாரத்து போக்கிரியென்றும்...அவனை எதிர்த்தால் வாழ்வு முழுவதுமே தங்களுக்கு எதிரியாகிவிடுவானென்றும், எனவே சிறிது நேரம் பக்கத்திலேயிருக்கும் அறையிலேயிருந்துவிட்டு அவன் போனதும் வீட்டுக்குப் போகலாமென்றும் அன்பாகப் பேசினான். நானும் முரடனின் வெறிச் செயலிருந்து தப்ப...இந்த பகல் வேடக்காரனின் பாகுமொழியை நம்பி பின் தொடர்ந்தேன்... பிறகுதான் உண்மை புரிந்தது. பாம்புப் புற்றை விட்டு எழுந்து புலிக்குகைக்கு வந்துவிட்டோமென்பதை அப்போததான் உணர்ந்தேன். யார் என்னை முதலிலே வழிமறித்தானோ அவனின் கூட்டுத தோழர்கள்தான் எனக்கு அபயமளிப்பதாக நடித்துக்கொண்டு ஓடோடி வந்தவர்கள் என்பதை புரிய வெகுநேரமாகவில்லை.

ஏகாம்பரத்தின் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள—அறைக்குத்தான் நான் தீயவர்களால் அழைத்துச் செல்லப்பட்டேன். அறையிலே எரிந்து கொண்டிருந்த சிறு விளக்கின் ஒளியைப் பெரிதாக்கினான் இவர்களிலே ஒருவன். மற்றவனோ சிதறிக் கிடந்த சீட்டுகளை ஒன்றாகஅடுக்கிக் கொண்டிருந்தான். ஒரு காலில்லாது சுவரோடு சாய்த்து வைக்கப்பட்டிருந்த ஆட்டம் போடும் நாற்காலியிலே இல்லை இல்லை முக்காலியிலே என்னை உட்காரச் சொன்னான் கறுப்புக் கண்ணாடிக்காரன். நான் உட்கார மறுத்தேன். 'சரிதான் வாம்மா ஜாலியாயிருந்துட்டுப் போனா என்னவாம்' என்று கொஞ்சிக்கொண்டே என் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டுபோய் உட்கார வைத்தான். நான் நடுநடுங்கிப்போய் எழுந்தேன். அவன் இரும்புப் பிடியை அழுத்தி மேலும் உட்காரவைக்க முயற்சித்தான். நான் திமிறினேன். அந்த அவசரத்திலே கொடியவனின் கரம் பட்டு என் ஜாக்கெட் கிழிந்துபோய் விட்டது. அழகை ரசித்துக்கொண்டே என் புஜத்திலே மீண்டும் விரல்களைப் பதித்தான்.

அந்த நேரத்திலே முதலில் வழிமறித்த முரடனும் கையில் பழவகைகளுடனும் பொட்டலத்துடனும் வந்து சேர்ந்தான் அறைக்குள்ளே ஒருவன் ஓடிச்சென்று கதவைச் சாத்தி தாள் போட்டான். நான் தப்பிக்க முடியாது என்ற நிலை பிறந்தது. கதறினேன் ... கூச்சலை அடக்க என்வாயிலே சில்க் டவலைத் திணித்து கதற முடியாதபடி செய்துவிட்டார்கள். பிறகு என்ன! அந்தக் கொடியவர்களின் ஆசையைத்தணிக்கும் கருவியாக்கப்பட்டேன். அவர்களின்... அந்த ஐந்து பேரின் அட்டகாசங்களை என்னால் சகிக்கவே முடியவில்லை. அந்த ஐவருக்கும் நான் துரோபதையாக்கப்பட்டேன். என்னை துரோபதையாக்கி வைத்தார்கள் அவர்கள்.

......இந்த நேரத்திலே கவனமாகக் கேட்டுவந்த நீதிபதி...ரமணியை நோக்கி ஒழுங்கு' ஒழுங்கு என்று கதறினார். ரமணி தான் ஆளாக்கப்பட்ட நாசநாடகத்துக்கு துரோபதையை எடுத்துக் காட்டாகக் காட்டியதானது அந்த நீதிதேவனுக்கு...ஒருவகை எரிச்சலைத் தந்துவிட்டதோ என்னவோ. அந்த எச்சரிக்கைக் குறிப்பை உணர்ந்து கொண்ட ரமணி...''அய்யா நீதியின் பதியே! நான் யாரையும் வேதனைப்படுத்துவதற்காக அப்படியெல்லாம் பேசவில்லை' நாசமாக்கப்பட்ட என்வேதனைக் கதையை உங்களுக்குக் காட்டுவதற்காகத்தான் அப்படிக்குறிப்பிட்டேன் அது இங்கு ஒழுங்கு என மதிக்கப்படவில்லை யென்றால்...மன்னியுங்கள். அவஸ்தைக்கு ஆளான உள்ளத்தின் ஆவேசப் பேச்சு என்று நினைத்துக் கொள்ளுங்கள்...என்று சமாதானம் கூறிவிட்டு மேலால் தன் வழக்கின் கதையைக் கூறத் துவங்கினாள்.

அப்போதுதான் கண்ணனின் கடற்கரை சம்பவம் பற்றி சாட்சி சொல்ல நர்ஸ் நர்மதா வந்து அமர்ந்திருந்தாள், நர்மதாவைப் பார்த்ததும் மடங்கியிருந்த காலரை தூக்கிவிட்டுக் கொண்டு சில்க் டவலை எடுத்து விலங்கு பூட்டப்பட்ட கரத்தோடேயே...கழுத்தில் சுற்றிக் கட்ட முயற்சித்துக் கொண்டிருந்தான், போலீஸ் இன்ஸ்பெக்டரின் கடுமையான பார்வையைப் பார்த்ததும் கழுத்திலே தொங்கிய டவலை கையிலேயே எடுத்துக் கொண்டான் நர்மதா அலட்சியத்தோடு அந்தப் பகல்வேடக்காரனைப் பார்த்துவிட்டு ... பேசிக்கொண்டிருந்த ரமணியை கவனிக்கத் துவங்கினாள்,

...''இரவு முழுவதும் நரகவேதனைப் பட்டேன், கள்ளத்தனமாக அவர்கள் வாங்கிவந்திருந்த சாராயத்தை வேறு குடித்துவிட்டு ஓரே பயங்கர உலகமாக்கினார்கள் அந்த அறையையே. அவர்களின் வெறி தீர்ந்தது, ஏதேதோ உளறிக் கொண்டே கண்ணயரத் துவங்கினார்கள்' நான் ஓசை படாமல் எழுந்தேன், என்னைச் சுற்றி அந்த ஐவர்படுத்துக் கிடந்தார்கள். நான் அலங்கோலமான நிலையிலே, என் கால்களை முத்தமிட்டுக் கொண்டு கண்ணன் படுத்துக் கொண்டிருந்தான். மெதுவாக அவனை உதைத்துத் தள்ளி காலை விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றேன் கிழிந்த ஜாக்கெட் அந்த நாசக்காரர்களுக்கு இடையேகிடந்தது. அதைக் கூட எடுக்கவேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை இப்போது அணிந்திருக்கும் இதே சிகப்பு கலர்புடவையைத்தான் அப்போதும் கட்டியிருந்தேன், அதை சரியாக எடுத்து உடம்புமுழுவதையும் போர்த்திக் கொண்டு...தாளிட்டிருந்த கதவைத் திறந்து வெளியேறினேன், விடியும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது, பாதையிலே நடந்து கொண்டிருந்தேன். யாரும் என்னைத் தொடருகிறார்களா வென்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தேன், பாலத்து ஓரத்து டீ கடையிலேயிருந்த இரண்டொருவர் என் நிலையைப் பார்த்ததும் சிரிக்காமலில்லை, அந்தச் சிரிப்பையெல்லாம் நான் அலட்சியப் படுத்திக் கொண்டு டீகடையினுள்ளேயே நுழைந்தேன். மூலையிலே சாய்ந்திருந்த டீகடையின் முதலாளி அந்தக் கோலத்திலே என்னைப்பார்த்ததும் திகைத்தார், அந்த டீக்கடைக்கும் நான்தான் வழக்கமாகப் பால் கொடுப்பேன். புதுக் கோலத்தோடு வெறி

12-ம் பக்கம் பார்க்க

புத்தகப் பூங்கா

மூரண்பாட்டைப்பற்றி

மா-சே-துங் கருத்தோவியத்தை தோழர் சிவராம கிருஷ்ணன் தமிழாக்கி யிருக்கிருர். விலை 7 அணு

*

சமாதானத்திற்கான ஐம்பெரும் கோட்பாடுகள்

விலை 2 அணு

கிடைக்குமிடம்: ஜனசக்தி காரியாலயம், சென்னை-14.

ஆரம்ப ஆசிரியன்

தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர்களின் திங்கள் இருமுறை வெளியீடு. ஆரம்ப ஆசிரியர்களின் அவலநிலையைப் போக்குவதற்கான கட்டுரைகளையும், கருத்தையும் கொண்டு வெளிவருகிறது. தோழர் வி. ராமுண்ணி இதன் ஆசிரியராகப் பணியாற்றுகிருர். விலை 2 அணு.

கிடைக்குமிடம்: 9, பிராட்வே சென்னை-1.

உரிமைக்குரல்

தி. மு. கழகக் கொள்கையைத் தழுவி இலங்கையிலிருந்து வெளிவரும் திங்கள் இதழ். இணை ஆசிரியர்கள் நா. பழனி நாதன் வி. எஸ். முருகன் இலங்கையிலும் சுற்றுப்புறங்களிலும் தி. மு. கழகக் கொள்கைகள் எவ்வாறு பரவிவருகிறது என்பதைச் சித்தரிக்கிறது. விறுவிறுப்பான நடை. இலங்கை வாழ் திராவிடர்களின் நிலை அறிய இந்த இதழ் ஓர் அரிய வாய்ப்பாக மிளிர்கிறது விலை 10 சதம் முகவரி:-69—1, பீர்சாகிப் வீதி கொழும்பு

குனியமுத்தூரில் திராவிடர் திருநாள்

குனியமுத்தூர் தி. மு. கழகத்தினரால் 15-1-55 அன்று திராவிடர் திருநாள் சிறந்த முறையில் கொண்டாட வுள்ளது.

அன்று காலையில் குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டி சொற்பொழிவுப் போட்டி, பாட்டுப் போட்டி ஆகியவை நடைபெறும். மாலை திருவண்ணாமலைத் தோழர் ப. உ. சண்முகம் அவர்களைக் கொண்டு பொதுக் கூட்டம், இரவு 10 மணிக்கு கூத்தும் நடைபெறும். போட்டியில் கலந்து கொள்ளும் தோழர்கள் கீழ்கண்டமுகவரியில் 13—1—55 குள் கடித முலமோ நேரிலோ பதிவு செய்துகொள்ள விழைகிறேன் என செயலாளர் தங்க மாணிக்கம் அறிவிக்கிருர்.

●

அருப்புக்கோட்டையில் கைத்தறியாளர் ஆதரவு வாரம்

கைத்தறியாளர் ஆதரவு வாரத்தை முன்னிட்டு நாளது ஜனவரி 7-ம் தேதி முதல் 13-ம் தேதி வரை எங்கள் தையற்தொழில் நிலையங்களில் கைத்தறித் துணிகளுக்கு மட்டும் பாதிக் கூலிக்கு சட்டைகள் தைத்துக் கொடுக்கப் படும்.

எம். முத்து
டெய்லரிங் ஹவுஸ், அருப்புக்கோட்டை,

எஸ். பி. சாமி
டெய்லரிங் ஹவுஸ், அருப்புக்கோட்டை
(தி. மு. கழக உறுப்பினர்கள்)

இந்தியாவில் ஜனத்தொகை அதிகரிப்பு

இப்போதுள்ள விகிதப்படி ஜனத்தொகை பெருகினால் 1951-ல் 360,000,000 ஆகஇருந்த ஜனத்தொகை 1961-ல் 410000000 ஆகவும் 1981-ல் 520000000 ஆகவும் பெருகவிடலாம் என்று லக்னோ பல்கலைக்கழக டாக்டர் ராதாகமல் முக்கர்ஜி கூறியிருக்கிருர். மேலும் அவர் கூறியதாவது: 1921 முதல் 1941 வரை ஜனத்தொகை 27 சதவிகிதம் அதிகரித்துள்ளது; இது மாதிரி உலகம் எங்குமே ஏற்படவில்லை. 1941 முதல் 1951 வரை வரை 13,4 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

மூன்று குழந்தைகளுக்கு மேற்பட்ட தாய்மார்கள் இந்தியாவில் தான் அதிகம்.

மக்களிடையே குடும்பப் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஆவல் இருந்து வருகிறது.

மைசூர் ராஜ்யத்தில் எடுக்கப்பட்ட சர்வேயிலிருந்து நகரபெண்களில் 60 சதவிகிதத்தினரும் கிராமப் பெண்களில் 40 சதவிகிதத்தினரும் அதிகமாக குழந்தைகளைப் பெறுவதை விரும்பவில்லை.

தோழர்களே

திராவிடன்

சந்தாதாரராகச் சேர்ந்து ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகம் அளிக்கும் மகத்தான விருந்து

ஒரே ஆசை

13—1—55 இரவு 8-மணிக்கு

பரேல் தாமோதர் தக்கர்ஸி மண்டபத்தில் நடைபெறும்

●

கழகத் தோழர்களும், ஏனையோரும் நடிக்கும் கருத்துச் சித்திரம்

கட்டணம்: ரூ. 1—5—0, 0—10—6

சமாதான மாநாடு—தொடர்ச்சி

இருக்கிறதே தவிர, மற்றபடி போர் செய்து தீரவேண்டிய அவசியம் இல்லாததால் அல்ல.

போரை மூட்டும் அவசியத்தில் அமெரிக்காவுக் கிருக்கும் நெருக்கடிகளைவிட ரஷ்யாவுக் கொன்றும் குறைந்திருப்பதாக நமக்குத் தெரியவில்லை. இப்படிச் சொல்வதால் ரஷ்ய நாடும் போர்வெறி படைத்ததென்றோ, போர் மூட்டியே லாபம் அடையும் அளவுக்கு ரஷ்யாவின் போக்கு இருப்பதாகவோ நாம் அறுதியிட்டுக் கூறுவதாக யாரும் நினைத்து விடவேண்டாம். ரஷ்யாவுக்காக பலியாக மற்றொரு சமுதாயம் தயாராகி விடுமானல் அமெரிக்காவுக்குக் குறையாத அளவுக்கு அதற்கும் போர்வெறி ஏற்பட்டுவிடக் கூடுமென்பதையும் நினைத்துப் பார்க்க இடமிருக்கிறதில்லையா?

ஆகவே, உலக சமாதானம் ஸ்திரதேமாக ஒளிக்கவேண்டுமானல், அதற்கு முதற்படியாக—அவசர வேலையாக, அந்தந்த இன மக்களின் நன்மை தீமைகளைப் பெரிதாக மதிக்கும் அரசாங்கம் அந்தந்த இன மக்களுக்குப் பாதுகாப்பாய் அமையவேண்டும்.

பக்கிங்காம் அரண்மனை படுசூரணமாக்கப்படுவதை சர்ச்சில் விரும்பமாட்டார், அதே நேரத்தில் கிரெம்ளின்கட்டடம் இடிந்துவிழுவதைப் பற்றி கவலைப் படமாட்டார்.

இங்கு, தஞ்சையிலும் திருச்சியிலும் அடித்த புயல் வடநாட்டவரின் நெஞ்சத்திலே அணுவளவு அனுதாபத்தைக்கூட எழுப்பவில்லை. அங்கு நேர்ந்த வெள்ளப் பெருக்குக்காக வேண்டிய அளவுப் பிரயாசைகளை எடுத்துக் கொண்டார்கள்!

தமிழன் தலையில் குண்டு விழுவதில் மார்வாடிக்குக் கவலையில்லை, மார்வாடியின் வீடு மண்மேடாவதைத் தடுக்கும் அவசியம் தமிழனுக்குத் தோன்றுது.

உலக மக்களுக்குள் இப்படிப் பட்ட வேற்றுமை மனப்பான்மை இருக்கக் கூடாது என்பதிலே நமக்கு கருத்து மாறுபாடில்லை. ஆனாலும் இருந்துத் தொலைகிறதே! ஒவ்வொருவருக்கும் தன்இனம், தன் வீடு, தன்பிள்ளைஎன்ற பந்தமும் பாசமும் இருக்கிற வரையில் அதற்கு அனுசரணையாகப் பணியாற்றியே சமாதானத்தை வளர்க்க வேண்டும்.

பிரஞ்சுக்காரன் வேறு என்ற எண்ணம் இந்தோ சீனர்களுக்கு இருந்து வந்ததால், அந்த நாட்டில் அமைதிக்குச் சமாதிகட்டி, ரத்த அபிஷேகம் செய்து வந்தார்கள், நிலமையை உணர்ந்து பிரஞ்சுக்காரன் வெளியேறி விட்டான், சமாதானமும் அங்கு நிலைபெற்றது. இப்போது சமாதானத்தை நிலை நாட்டுவதிலே இந்தோ சீனமும் நேரடி பங்கெடுத்துக் கொள்ள முடியும். தன்னுல் விரட்டி விரட்டியடிக்கப்பட்ட அதே பிரஞ்சுக்காரனுடன் தோளொடு தோள் நின்று உலக அமைதிக்காக உழைக்க முடியும். பிரஞ்சுக்காரன் வேறு தான் வேறு என்ற எண்ணம் மறைந்து உலகத்தின் பிரஜைகளாக அவர்கள் உறவு கொண்டாட முடியும்.

இதே போல்தான் ஒவ்வொரு நாட்டிலும் சமாதான சக்திக்கு ஆதரவைப் பெருக்குவதற்கான வழி. மக்களை இன்னலுக்குள்ளாக்கத் துணியாத அரசாங்கம் எங்கும் அமைய வேண்டும்; அரசாங்கத்துக்கு அவப் பெயர் உண்டாகக் கூடாதென்பதிலே மக்களுக்கும் அதிகமான உற்சாகம் இருக்கும் அளவுக்கு மன நிறைவு இருக்கவேண்டும்.

இதை எடுத்துக்காட்டி 'திராவிடன்' ஓராண்டுக்கு முன்பாகவே—சமாதான மாநாடு சென்னையிலே கூடுமென்று யாரும் கனவிலும் கருதாதிருந்த காலத்திலேயே— தெளிவாக எழுதியிருக்கிருன்.

"பிரதி நாட்டிலும் அந்தந்த நாட்டு மக்களின் அரசாங்கமே நிலவுமாறு ஐ நா. சபை கவனித்துக் கொள்ளவேண்டும். இந்தப்படியான அரசாங்க அமைப்பு, அந்தந்தநாட்டின் கலாச்சாரம், பரம்பரை, பண்பாடு நாகரீகம் ஆகியவைகளை அனுசரித்தாற் போலவே இருக்கவேண்டும். அப்போதுதான் மக்களுக்கிருக்கும் சமாதான ஆர்வம் தழைக்கும். கட்டுப்பாடும் முணுமுணுத்தலும் அற்ற சமாதான வாழ்வானது மக்களிடத்தில் தன்னம்பிக்கையை உண்டுபண்ணுகிறது, தன்னம்பிக்கை உடையவர்கள் மற்றவர்களை சந்தேகத்தோடு பார்க்கமாட்டார்கள். இதனுல் அகில உலகத்திலும் பரஸ்பரம் கனிசமான உறவு முறைகள் ஏற்படும். இந்த உறவுமுறை தீங்கு செய்ய ஒருப்படாது. செய்பவனையும் பார்த்துக் கொண்டிராது. உலகிற்கு ஒரு தீமை நிகழ்கிறதென்றால் எல்லா நாடுகளும் சேர்ந்து அதை முறியடிக்கும். தங்களுடைய சுதந்திர வாழ்வுக்கு ஊறு நேரக்கூடாது என்பதற்காகவாவது அது எதிர்த்துப் போராடியே ஆக வேண்டும்..."

'திராவிடன்' எழுதியிருந்த இந்த கருத்தை அப்படியே, சென்னை சமாதான மாநாட்டில் முதல் தீர்மானமாக நிறைவேற்றியிருப்பது கண்டு மகிழ்கிறோம்.

இந்தப்படியான தீர்மானத்தைநிறைவேற்றியிருக்கும் மாநாட்டில் "தத்துவரீதியான விளக்கங்களைக் கொடுத்து—காரிய சாத்தியமான நடவடிக்கைகளைப் பற்றிப் பேசவில்லை" என்று நாம் குறைபட்டுக் கொள்வது எதனுல் என்பது சமாதான மாநாட்டில் கலந்து கொண்ட பெரியோர்களுக்குத் தெரியாமலிராது. காரிய சாத்தியமான நடவடிக்கைகளை எடுப்பதாயிருந்தால், மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானத்தை அமுலாக்க முனைபட்டும்.

திராவிட இனம் அதற்கு மாறுபட்ட இனத்தின் பிடிப்பிலே இருப்பதை எதிர்த்து எல்லோரும் எழட்டும். நாம், திராவிட இயக்கத்தினர் என்று சொல்வதை விடுத்து, சமாதான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றுகூட பெயர் மாற்றிக் கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

செய்வார்களா! ஒரு அணுகுண்டுக்கு ஒரு லட்சம் கையெழுத்துக்களை மதிப்பிட்டுப் பார்க்கப் போகிருர்களா! நாட்டு மக்கள் அதைச் சொல்லட்டும்! மாநாட்டின் தீர்மானங்கள் எதிர்காலத்திலே எப்படி வேலை செய்கின்றனவென்பதைக் காட்டட்டும்!

●

நாகை தி. மு. கழகம்

9—1—55 ஞாயிறன்று காலை 7 மணி முதல் இரவு 9 மணிவரையில் நாகை தி. மு. கழகக் கட்டடத்தில் கைத்தறி ஆடைகள் விற்பனை செய்யப்படும். அன்று காலை 7 மணி முதல் 9 மணி வரையில் நாகை தி. மு. கழகத் தோழர்கள் நகரின் வீதிகள் தோறும்—தெருக்கள் தோறும் கைத்தறி ஆடைகளை விற்பனை செய்வர்.

மைசூர் மின்சார சிப்பந்திகள் வேலை நிறுத்தம்

மைசூர் மின்சார இலாகா சிப்பந்திகள் வேலைநிறுத்தம் வலுத்துவருகிறது. 144 தடையுத்தரவை மீறி கூட்டம் கூடியதாக சர்க்கார் மின்சார இலாகா சிப்பந்திகள் சங்கக் காரியதரிசி அபீத்ஷா என்பவரும் மற்றும் 13 பேர்களும் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

மதுரை மாநாடு.

வரவேற்புக் குழுவின் முக்கிய கூட்ட முடிவு

3-1-55 பிற்பகல் 3-மணிக்கு மதுரை மாவட்ட தி. மு. கழக இரண்டாவது மாநாட்டு வரவேற்புக்குழு உறுப்பினர்கள் அவசரக் கூட்டம் மதுரை நகர் 4, கட்ராபாளையம் மாநாட்டு அலுவலகத்தில், சோழவந்தான் ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டுச் செயலாளர்களில் ஒருவர்என்ற பொறுப்பான முறையில் உள்ளதோழர் அய்யாசாமி மாநாட்டு காரியத்தில் எத்தகைய குறைபாடு இருப்பதாகத் தோன்றினுலும், வரவேற்புக் கமிட்டியிடமோ, தலைமை கழகத்திடமோ புகார் கூறியிருக்க வேண்டுமே தவிர கண்டன அறிக்கை வெளியிட்டிருக்கக் கூடாது. எனவே கழகத்தை இழிவு படுத்தும் முறையிலும், வரவேற்புக் கமிட்டியை அவமானப்படுத்தும் வகையிலும் அறிக்கை வெளியிட்டிருப்பதை கண்டிப்பதுடன், மாநாட்டுச் செயலாளர் பொறுப்பிலிருந்து தோழர் 'அய்யாசாமியை நீக்கி விடுவதென்று தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

மாநாட்டுவேலைகளைத் தொடர்ந்து நடத்த தோழர் எஸ். முத்து அவர்களுக்கு அதிகாம் அளித்து இக்கூட்டம் முடிவு செய்தது.

(ஒப்பம்)

தா. ஆவுடையப்பன்
கூட்டத்தலைவன் 3-1-55

விளக்கமும் வேண்டுகோளும்

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாடு சம்பந்தமாக பொது மக்கள் மனதிலே சந்தேகம் எழத்தக்க வகையிலும் கழகத் தோழர்கள் மனம்புண்படும் முறையிலும் தோழர். அய்யாசாமி ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பது கண்டு நாங்கள் மிகவும் வருத்தப்படுகிறோம்.

தோழர் அய்யாசாமி மேற்படி மாநாட்டில் செயலாளர்களில் ஒருவர். தோழர் முத்து மற்றொரு செயலாளர் மாநாட்டு காரியங்களை அவர் செவ்வனே செய்து வருகிறார். சில காலமாகவே தோழர் அய்யாசாமி மனத்தாங்கல் கொண்டிருக்கிறார். இதன் காரணமாக மாநாடு நடத்துவதே தாமதிக்கப்பட்டு தலைமைநிலையத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட தோழர் என். வி. நடராசன் அவர்கள் மூலம் ஒரு சமரச ஏற்பாடு செய்யப்பட்டு, தோழர் அய்யாசாமி அறிக்கை விடுவதற்கு முன்தினம் வரையில் கூட மாநாட்டு வேலைகளை ஓரளவு செய்து கொண்டு வந்தார். இப்போது என்ன காரணம் கொண்டோ புகார் கிளப்புகிறார்.

தனக்கும் மாநாட்டுக்கும் சம்பந்தமில்லை யென்றும் தனது தவறிப்போன கையெழுத்து அச்சு டிக்கட்டுகளில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதாகவும், எவ்வளவு டிக்கட்டுகள் அச்சாயின, செலவாயின, என்பது தமக்குத் தெரியாது என்றும், அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

இதை அவர் முறைப்படி சொல்ல வேண்டியது வரவேற்புக் கமிட்டியிடம், அல்லது தலைமைக் கழகத்திடம். அறிக்கை விடுவதன் மூலம் அவர் வேண்டுமென்றே பழிசுமத்த விரும்புகிறார் என்பது விளக்கமாகிறது.

மாநாட்டு டிக்கட்டுகளில் இவர் கையெழுத்து மட்டுமல்ல. மற்றொரு செயலாளரான முத்துவின் கையெழுத்தும் இருக்கிறது. டிக்கட்டுகளின் எண்ணிக்கை, விற்பனை விபரம், வரவு, செலவு யாவும் வரவேற்புக் கமிட்டியாராகிய நாங்கள் பரிசீலனை செய்வோம் என்பது பொறுப்புணர்ந்த பொதுமக்களுக்கு தெரியும். தலைமைக் கழகமும், இந்தக் காரியத்தைக் கவனிக்கும். எனவே, வீண் புகார் செய்து கழகத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படச் செய்யும் போக்கைக் கண்டிக்கிறோம். இது வரையில் தோழர் அய்யாசாமி செயலாளர் பதவியிலிருந்து விலகவுமில்லை. வரவேற்புக் கமிட்டியிடம் முறைப்படி புகார் கூறவுமில்லை. எனவே அவருடைய போக்கை கண்டிக்கும் முறையில் அவரை செயலாளர் பொறுப்பிலிருந்து நீக்கிவிடுவதுடன், மாநாட்டு வேலைகளை தொடர்ந்து நடத்த மற்றோர் செயலாளரான தோழர் முத்துவுக்கு அதிகாரம் அளிக்கிறோம். எத்தகைய விஷமத்தனங்கள் நடைபெற்றாலும், மாநாடு சீரும். சிறப்புமாக நடத்த கழகத் தோழர்களும், பொதுமக்களும் ஆதரவு அளிக்கக் கோருகிறோம். மாநாட்டு வரவு, செலவு சம்பந்தமாக எத்தகைய புகாருக்கும் இடமின்றி வரவேற்புக் கமிட்டி தன் கடமையைச் செய்யும் என்று உறுதி அளிக்கிறோம்.

இப்படிக்கு,

மதுரை மாவட்ட தி. மு. க.
இரண்டாவது மாநாட்டு
வரவேற்புக் குழுவினர்.

ஒப்பம்

தா. ஆவுடையப்பன், சோழவந்தான்
ஜி. ரத்தினம் மதுரை
எஸ், சி. மாணிக்கம் மதுரை
ம. அப்துல்காதர் மதுரை
வ. திருமாறன் மதுரை
சு, கருப்பண்ணன் சமயநல்லூர்
பெ. நடராசன் வில்லாபுரம்
அ. தர்மர் மதுரை
எஸ். ஏழுமலை ஒத்தக்கடை
கா. அழகர்சாமி கொட்டகுடி
இரெ. ஜனார்த்தனம் வடுகபட்டி
பி. ராமானுசம் மதுரை
கே. வி. கருப்பையா
சி. மூக்கன் சிட்டம்பட்டி
இரா. சு. அரசுக்கண்ணன் திருப்பரங்குன்றம்
சா. நடசாசன் நாகமலைபுதுக்கோட்டை
மூரா. தேவராசன் உசிலம்பட்டி
அ. கந்தசாமி, மதுரை
ஜி. திருப்பதி, மாங்குளம்
மா. பெரியசாமி, போடி
என். ராமசாமி உசிலம்பட்டி
வீ. வேலு வெள்ளரிப்பட்டி
மு. கருப்பையா தீடிர்நகர்
எஸ். மணி, கரிசல்குளம்
எஸ். பாண்டி, மதுரை
சு. சோமசுந்தரம் தணியாமங்கலம்—கீளையூர்
அறமன்னன் மதுரை
பி. எஸ். மணியன் சின்னனம்பட்டி
பி. கே. சேதுராமன் மதுரை
கு. வேலு மதுரை
என். ராமச்சந்திரன் கல்லணை
இ. சாத்தான் நிலக்கோட்டை
ப. கார்மேகம் பரவை
சு. தொ. ஆறுமுகம் திருவாதவூர்
பால்ராஜ ஆண்டிப்பட்டி

கதைநாயகி...தொடர்ச்சி

பிடித்தவளைப் போல வந்திருக்கும் என்னைப் பார்த்ததும் எப்படியெல்லாமோ எண்ணித் துடித்தார். நான் அவரது திகைப்பைப் போக்கும் முறையிலே என் சீரழிந்த கதையைக் கூறினேன்.

டீகடை முதலாளி எவ்வளவோ நல்லவர். அழுது அழுது கூறிய கதையைக் கேட்டதும் நல்ல வார்த்தைகள் கூறி சமாதானப்படுத்தியதோடு நிற்கவில்லை அந்த அரக்கர்களின் ஆணவ ஆட்டத்துக்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேண்டுமென்று துடித்தார். எனவே, அந்த நிலையிலேயே அதே கிழக்கு வெளுக்கும் நேரத்திலேயே என்னை மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று புகார் கூறி வழக்குப் பதிவு செய்ய ஏற்பாடு செய்தார். போலீஸார் அடுத்த நாள் இரவுதான் இந்த துரோகக் கும்பலை...அந்தனை பேரையும்... ஒரே இடத்திலே பிடிக்க முடிந்தது. அவர்களும் கோர்ட்டுக்கு கொண்டுவரப் பட்டார்கள். நானும் அழைக்கப்பட்டு என் வேதனைக் கதையைக் கூறிவிட்டேன், இனி உங்களின் உயர்வான நீதிக்குத்தான் காத்திருக்கிறேன்.

...பேசி முடித்த ரமணியை நன்ருக உற்றுப்பார்த்தார் நீதிபதி, அவள் பேச பேச அவர் குறித்து வைத்திருந்த குறிப்புகளையும் ஒருமுறை திரும்பப் படித்துப்பார்த்தார். ஆழ்ந்த யோசனைக்குப்பின்பு கண்ணனைமட்டும் கூண்டிலே நிற்றி விசாரிக்கத் துவங்கினார் நீதிபதி. அவனோ...ரமணியைத் தானோ தனது நண்பர்களோ பலவந்தப்படுத்தவில்லையென்றும் ரமணி பால் வியாபாரி மட்டுமல்ல...அவள் ஒரு விபாசார வியாபாரியுங்கூட எனவே...தங்களை அவமானப்படுத்த வேண்டுமென்பதற்காக டீகடைகாரன் ரமணியைகருவியாக்கிக்கொண்டு நாடகமாடியிருக்கிறான். எனவே தாங்கள் நிரபராதிகள் என வாதாடினான்.

அதற்குப் பிறகு நர்மதாவின் கடற்கரை சம்பவம் பற்றிய விசாரணை ஆரம்பமாகியது. அதுவும் கண்ணன் சம்பந்தப்பட்ட விசாரணையாகையால் ரமணியின் வழக்குக்கு தீர்ப்பளிக்காமலேயே ...கடற்கரை கலவரத்தையும் தெரிந்து கொண்டு ஒரே தீர்ப்பு தந்துவிட நீதிபதி விரும்பியிருந்தார்.

நர்மதா விவரத்தை, நீதிபதியிடம் அடிக்கடி ஆங்கிலத்திலும்...தமிழிலுமாகவே பேசி விளக்கி வைத்தாள். டாக்டர்ஊரிலே இல்லாததால்அவர் அவசிய மென்று தேவைப் படாததாலும் அவர் சார்பான விளக்கங்களையும் நர்மதாவே கூறிவைத்தாள். அந்த குற்றச்சாட்டுகளுக்கும் ஏதேதோ கூறி உண்மையை மறைக்கப் பார்த்தான் கண்ணன்.

ஆனால் இறுதியாக......எல்லோரின் சாட்சியங்களுக்குப் பிறகும் நீதிபதி கண்ணனின்—அவன் கூட்டுத் தோழர்களின் நிலைமை தெளிவாகவே எடைபோட்டுக்கொண்டு தீர்ப்பளிக்கத்துவங்கினார்.

..."போலீசார் கைப்பற்றிய சாராய பாட்டிலிலிருந்தும், கிழிந்து கிடந்த ஜாக்கெட் துணியும், கடற்கரை கலவரம் பற்றி போலீசார் சேகரித்துத் தந்த தகவல்களும்...கண்ணன் கோஷ்டியார் எப்படிப்பட்ட குண இயல்புகள்கொண்டவர்களென்பதும் கோர்ட்டாருக்குத் தெளிவாக்கி வைக்கப்படுகிறது. என்னதான் பொய்க்காரணங்களையும்—சாட்சி ஆதாரங்களைக் காட்டினாலும் ... அவர்கள் மன்னிக்க முடியாத குற்றவாளிகள் என்பது மட்டும் மிக மிகத் தெளிவாகிறது. எனவே—இனியும் இவர்களும் இவர்களைப் போன்றவர்களும் இது மாதிரியான...நாட்டினருக்குப் பாதகத் தரும் தீச்செயல்களிலே ஈடுபடுவதைத் தடுக்கும் முறையிலே கண்ணன்உட்பட அவன் கோஷ்டியைச் சேர்ந்த ஒவ்வொருக்கும் ஆறுமாத தண்டனை அனுபவிக்கும்படி தீர்ப்பளிக்கிறேன்.

...இப்படிக் கூறிமுடித்த நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டதும் கண்ணன் கோஷ்டியின் முகத்திலே பிரேதகளைதட்டியது. ரமணியிடம் விடை பெற்றுக் கொண்டிருந்த நர்மதாவின் மீது எரிச்சல் பார்வையை வீசிக்கொண்டே நடந்தான் கண்ணன். அவனுக்குப்பின்னே போலீஸார் பாராகொடுத்து நடந்து கொண்டிருந்தார்கள்.

(முடியவில்லை)

ஏனோ?

எழில்மேவும் இருவிழியால்
எனைமேய்ந்துச் செல்வாள்
இன்பவிதழ் இளநகையால்
இதயத்தை வெல்வாள்
வழிகின்ற வனப்பதுதான்
வாழ்கின்ற மெய்யாள்
மலர்திறந்து மனக்கருத்தை
மொழிதலொன்றும் செய்யாள்
விழிபதித்து எழில்பருக
விரும்பிமுகம் பார்ப்பேன்
விரைந்தோடி என்னெஞ்சில்
வேதனைதான் சேர்ப்பாள்
பழியில்லாப் பழந்தமிழின்
பாவினிமை போன்ருள்
பயின்றிடநான் சென்ருலோ
என்னெதிரே தோன்ருள்

குடமேந்திக் குமரியவள்
குதித்தாடி நடப்பாள்
குமுறுகின்றக் காதலதைக்
கொட்டிடபின் நடப்பேன்
இடம்வாழும் எழிலியவள்
என்னுருவைக் கண்டே
எனைநீக்கும் எண்ணமதை
இதயத்தில் கொண்டோ
உடனோடி உயிர்த்தோழி—
—யர்க்கூட்டம் சேர்வாள்
உடல்நீக்கி உயிர்பிரிக்க
அச்செயலே ஓர்வாள்
விடம்போலும் கொலைத்தொழிலை
விளைவிக்கத் தானோ
விதைத்திட்டாள் என்னிடத்தே
காதலைப்பின் ஏனோ?

ஆர். எஸ். சம்பந்தம்

கழகச் செய்திகள்

பம்பாய் சயன் தி. மு. க. முதல் ஆண்டு நிறைவு விழா

சயன் இராமர் கோயில் திடலில், 10-12-54 மாலை 7 மணிக்கு எஸ். இராசன் அவர்கள், தலைமையிலும் 11-12-54 மாலை 7 மணிக்கு எ. என். இராமசுவாமி அவர்கள் தலைமையிலும் பொதுக் கூட்டங்கள் நடந்தன. முதல் நாள் பி. கே. இளமைப் பித்தன் வரவேற்புரை அளித்தார். பின், பம்பாய் மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் சி. த. மு. இர. ஆரிய சங்காரன் தி.மு.க கொடியை ஏற்றிவைத்து கொடியின் இலட்சியத்தைப் பற்றி சொற்பெருக்காற்றினர். கடேசியாக தூத்துக்குடி இரா. சு. தங்கப்பழம் அவர்கள் "அண்ணா" என்ற கையெழுத்து மாத ஏட்டை திறந்து வைத்து தென்னாட்டில் வெளியாகும் பத்திரிகைகளைப் பற்றியும், சமூகத்தைப்பற்றியும் $1\frac{1}{2}$ மணி நேரம் சொற்பெருக்காற்றினர். கழகச் செயலாளர் நன்றி நவில கூட்டம் 10 மணிக்கு இனிது கலைந்தது.

இரண்டாம் நாள், பி. சண்ணன் அவர்கள் கடவுள் கண்ட கழகம் என்ற கலை நிகழ்ச்சியின் மூலம் மக்களை சிரிப்புக் கடலில் ஆழ்த்தினர்.

இரா. சு. தங்கப்பழம் அவர்கட்கு சயன், தி. மு. க. எ. என். இராமசுவாமி ஆர். தே. பண்பரசு, சார்பாக கைத்தறி ஆடைகளும், பி. கே. இளமைப்பித்தன் சார்பாக மலர்மாலையும் அணிவித்தனர். பிறகு இரா. சு. தங்கப்பழம், பலத்த கைதட்டல்களுக்கு மத்தியில், அரசியலின் ஊழல்களையும், மாற்றுக் கட்சிகளின் நோக்கங்களைப் பற்றியும் சொற்பெருக்காற்றினர்.

தூத்துக்குடி தோழர்கள் இரா. சு. தங்கப்பழம், சிவசாமி நடராசன், ரத்தினம் உள்ளிட்ட எல்லா தோழர்களையும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு சென்னை அரசாங்கத்தை சயன் தி. மு. க. கேட்டுக் கொள்வதென்றும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேறின.

*

விசுவநாதத்திற்கு வரவேற்பு

தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்க சார்பில் திருச்சி ஆ. எ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு ஓர் வரவேற்புக் கூட்டம் 26—12—54 மாலை தாராவி கணேசர் ஆலயச் சதுக்கத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் ஒ. த. அய்யாசாமி கூட்டத்திற்கு தலைமை வகித்தார். அனைவரையும் வரவேற்றுப் பேசிய செயலாளர் சிவபாண்டியன் அவர்கள் பம்பாய் வாழ் தமிழர்களில் தாராவித் தமிழர்கள் அதிகப்படியான அவலநிலையில் அழுந்துபவர்கள், எனினும் பிறந்த நாட்டின் பெருமைக்கும் பேசும் மொழியின் வளர்ச்சிக்கும் தன் பேருழைப்பை நல்கும் தமிழக நல்லறிஞர்களையும் தலைவர்களையும் வணங்கி வரவேற்பதில் தனித்ததோர் இன்பங் காணுவதில் தவறியதே யில்லை. வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவு என்ற நினைப்புடன் பிறந்த மண்ணில் வாழ்ந்தன்கூட பிழைக்கவந்த நாட்டில்தான் தாய்மொழியின் மேல் தனிச் சுவையை காண்கிறான் என்பதற்கு பம்பாய் தமிழ் சங்கம் நடத்திய மூன்றுநாள் தமிழ் மட்டுமல்ல, கொட்டும் குளிரைக் கூட பொருட்படுத்தாமல் தமிழர்கள் திரளாகக் கூடியிரும்பதே சான்றாகும் என்றார்.

பின்னர் பம்பாய் தமிழரசுக் கழகம் பம்பாய் விநாயகர் கலைமன்றம், நெல்லை மறுமலர்ச்சி நடிகர் மன்றம், பம்பாய் தோல் பதனிடும் தொழிலாளர் சங்கம், ஜனநாயக வாலிபர் சங்கம் எஸ். சுப்பையா, மணிப்புரம் சங்கம், நாடக ஆசிரியர் சவ்தண்யராஜ சித்திரைக் கலா நிலையம், பம்மாய் மக்கள் முன்னேற்றக் கலாமன்றம் முதலிய நிறுவனங்களால் சி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. வரவேற்புக்கு பதிலளித்த கி. ஆ. பெ. விசுவநாதம் தமக்களிக்கப்பட்ட வரவேற்பும் மரியாதையும் தேமதுரத் தமிழ்மொழிக்களித்ததாக தாம் கருதுவதாகவும் மதம் சாதி கட்சிகளின்பேரால் மக்களை ஒன்று திரட்டுவதைக் காட்டிலும் பேசும் மொழியினையும், பிறந்த நாட்டினையும் முன்னிருத்தி அழைத்தால் ஒருமையோடு கூடிய ஒருபெரு நிலைக்குத் தமிழர்களை திரட்ட முடியுமென்றும் பிறப்பால் மனிதன் அடையும் பெருமைகளைவிட சீரிய செயல்பாடுகளால் எய்தும் சிறப்புத்தான் உயர்ந்ததென்றும் உரைத்தார்.

ஆனைக்குளம்

தென்காசி அடுத்த ஆனைக்குளம் கிராமத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் பீர்முகம்மது தலைமையில் கடந்த 31—12—54 மாலை 8 மணிக்கு நடைபெற்றது. அதுசமயம் கே. எ. கலைபழகன் 'திராவிடம்' என்பது குறித்து சொற்பொழிவாற்றினர்.

உதகை

29—12—54 இரவு 8 மணிக்கு அண்ணா முரசொலி மன்ற செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் மன்ற ஆண்டு விழாவும் பொங்கற் திருநாளும் தைத்திங்கள் முதல்நாள் கொண்டாடுவதெனவும் அன்றே புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் கல்கி கிருஷ்ணமூர்த்தி மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தும் நாடக தடைச் சட்டத்தைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

கைத்தறியாளர் ஆதரவு வாரம்

●

அண்ணாவின் வேண்டுகோள்

கைத்தறியாளரின் கண்ணீர் ஆட்சியாளரால் இன்னமும் துடைக்கப்படவில்லை. எனவே, அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்கள் வாழ்வதற்கான சிறிதளவு வசதியையாவது, செய்து கொடுக்க வேண்டியது, பொதுமக்களுடையதும், பொது மக்களைச் சார்ந்து நிற்கும் இயக்கங்களுடையதும் ஆன கடமையாக இருக்கிறது. அதனை நன்கு உணர்ந்ததால், திராவிட முன்னேற்றக் கழகம், தன்னால் இயன்ற அளவு பணியினை வெற்றிகரமாகச் சென்ற ஆண்டுகளில் செய்து காட்டியிருக்கிறது, இவ்வாண்டும் ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகள் கடமையைச் செவ்வனே செய்து காட்ட வேண்டுமென்று கிளைக் கழகங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுதுள்ள நிலையில் கைத்தறியாளர்களின் துயரைப் போக்கக் கூடிய வகையில் செய்யக்கூடிய பணி, கைத்தறித் துணிகளை ஏராளமான அளவில் எல்லா வழிகளிலும் வாங்கும்படி பொதுமக்களைத் தூண்ட வேண்டியதாகும்; அதற்கான அரிய வாய்ப்பு, வருகின்ற பொங்கற் புதுநாளாகும்.

பொங்கற் புதுநாளில் பொது மக்கள் உடுத்தும் புத்தாடைகள் கைத்தறித் துணிகளாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தியும், கைத்தறிப் பொருட் காட்சிகளை ஏற்பாடு செய்து கைத்தறித் துணிகளை வாங்கும்படி பொதுமக்களைத் தூண்டியும் கைத்தறித் துணிகளை தனிப்பட்ட முறையில் சென்றோ, அல்லது ஊர்வலமாகப் போயோ விற்பனை செய்தும், கைத்தறித் துணி செலவழிவதற்கான கடமைகளைப் பொதுவாகப் பொதுமக்கள்—குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் புரிவார்களாக!

மேற்குறித்த கடமைகளைச் செய்வதற்கான முறையில், ஜனவரித் திங்கள் 7-ம் நாளிலிருந்து 13-ம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தை கைத்தறியாளர் ஆதரவு வாரமாகக் கொண்டாடும்படி பொதுமக்களையும், திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளையும் வேண்டிக் கொள்கிறேன்.

கைத்தறியாளர் உள்ளங்களிலே மகிழ்ச்சி பொங்க, அவர்கள் இல்லங்களிலே மகிழ்ச்சி பொங்கட்டும்!

சி. என். அண்ணாதுரை

பொதுச்செயலாளர், திராவிட முன்னேற்றக் கழகம்

இலங்கை

திம்பிரிகாசாயா தி. மு. கிளையின் செயற்குழு கூட்டம் 21—12—54-ல் தாளமுத்து நடராசன் படிப்பகத்தில் தோழர் மாதவராசன் தலைமையில் கூடி எதிர்வரும் 14—11—55ல் கழகத்தின் ஆண்டுவிழா நடத்துவதெனவும் சென்னை அரசியலாரால் நிறைவேற்றப்பட்ட நாடக மசோதா தடைச் சட்டத்தை கண்டித்தும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேறின.

ஆலத்தூர்

பேரளம் ஆலத்தூரில் 29-12-54 மாலை 4 மணிக்கு ஆ. ம. வேலன் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

கழகம் அவசியம்குறித்து சில தோழர்கள் பேசியபின் செயலாளர் பி. ராமலிங்கம். துணைச் செயலாளர் ஆ. ம. வேலன் நிதியாளர் வீ சுந்தரேசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 13 பேர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாயூரம்

மாயூரம் நகர தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் நகரசெயலாளர் தோழர் என. கிட்டப்பா தலைமையில் 2-1-55 ஞாயிறு அன்று நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கைத்தறியாளர் ஆதரவு வாரத்தை ஒட்டி நகர தி. மு. கழக சார்பில் துண்டு விளம்பரங்கள் மூலமும் விளம்பரத் தட்டிகள் மூலமும் பொதுமக்களைக் கைத்தறித் துணிகளையே வாங்கி ஆதரிக்குமாறு கோருவது

5—12—54 அன்று நடைபெற்ற பொதுக்கூட்ட வரவு—செலவு சரி பார்த்து ஒத்துக்கொள்ளுகிறது.

சென்னை சர்க்காரால் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் ஷாப் ஆக்டின் திருத்தத்தின்படி மூன்று பேர்களுக்கு உட்பட்ட கடைகளில் உள்ள தொழிலாளர்களை பாதிக்கின்றபடியால் அந்த திருத்தத்தைக் கைவிடுமாறு அரசியலாரை கோருகிறது.

சென்னையில் நடைபெற்ற தி. மு. கழக மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளை திரைப்படமாக எடுக்கப்பட்டதையும் கழக முன்னணி வீரர்களின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பேச்சுக்களையும் திருச்சி மாநில மாநாட்டில் பொதுமக்களுக்கு பார்க்கவும் கேட்கவும் வாய்ப்பை ஏற்படுத்தித்தருமாறு பொதுக்குழுவையும் பொதுச்செயலாளரையும் கோருகிறது.

16—1—55 அன்று பொங்கல்விழாவினை நடத்துதல்.

இராமேசுவரம்

பாண்டியன் நினைவுப் படிப்பகத்தின் உறுப்பினர் கூட்டம் 30—12—55 இரவு 10 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் எஸ். துரைராசு தலைமையில் கூடி திராவிடர் திருநாள் பொங்கல் விழாவை ஜனவரி 18-ந் தேதி கொண்டாடுவதென்றும் திராவிடன் ஆசிரியர் என். வி. நடராசன் மதுரை என். முத்து ஆகியோரை அழைப்பதென்றும் புதிய நாடக சட்டத்தை கைவிடுமாறு முதன் மந்திரியை கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

அறந்தாங்கியில் திராவிடர்திருநாள் தி. மு. கழக ஏற்பாடு

விளையாட்டுப் போட்டிகள், கட்டுரை கவிதை, சித்திரப்போட்டிகள் முதலியன அகரம் அஞ்சல் நிலையத்திற்கு எதிரிலுள்ள திடலில் 7—1—55-ல் துவங்கி 16—1—55-ல் முடிவுறும் 16-1-55 மாலை வ. உ. சி. திடலில் பரிசில் வழங்கலும், விழாப் பொதுக்கூட்டமும் நடைபெறும். ஓவியன் கர்ணா தலைமையில், தோழர் இளமுருகு பொற் செல்வி, கவிஞர் எம். எல். ராமசாமி பேசுவர்.